விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 03 வெள்ளிக்கிழமை (16.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை அரசின் போர்க்குற்றம்

# மீண்டும் நிரூபித்தது சனல் 4



பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனது சடலத்தையும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் என கருதப்பட்டவர்களின் சடலங்களையும் படத்தில் காணலாம்...

(இலண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களங்கள்-தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் எனும் காணொளி, இலங்கை அரசாங்கமும் இராணுவத் தலைமைப் பீடமும் மேற்கொண்ட போர்க்குற்றங்களை மீண்டும் ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் குழு ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனிதஉரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை பிரதிநிதிகளின் முதலாவது குழுவினர் நேற்று பயணமாகினர்.

அமைச்சர்கள் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட சிலர் இந்தக் குழுவில் அடங்குவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இன்றும் மற்றொரு குழுவினர் ஜெனிவா நோக்கி பயணமாகவுள்ளனர். இதேவேளை மகிந்த சமரசிங்க (23ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 நேற்று வெளியிட்ட காணொளி இலங்கை மீது சர்வதேசம் கடும் சீற்றம்

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை எதிர்வரும் 22ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும். அதே வேளை அன்றைய தினத்திற்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரத்திற்கு முதன்மை அளிக்கப்படும் என தெரியவருகின்றது.

இதற்காக ஜெனிவா களத்திற்கு அவசரமாக அழைக்கப்பட்ட அமெரிக்காவின் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் குழுக்களாக பிரிந்து சென்று உறுப்பு நாடுகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுக்களை நடத்திவருகின்றனர் என ஜெனிவாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கவெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட ராஜதந்திரியான அட்டுல் கெஷாப் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதில் அமெரிக்கா என்றுமில்லாதவாறு தனது ராஜதந்திர நடவடிக்கைகளை பலப்படுத்தும் முகமாகவே நூறுக்கு மேற்பட்ட அதிகாரிகளை களம் இறக்கியுள்ளது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான (23ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று மாலை யாழ்ப்பாணம் வரும் ரணில் விக்கிரமசிங்க நாளை இங்குநடைபெறும்பல்வேறு நிகழ்வுகளிலும்கலந்து கொள்வதுடன் மக்கள் சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர்ரணில் விக்கிரம (23ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 ஆவணப்படம் போலியானதாம்-அரசு

(இலண்டன்)

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள புதிய ஆவணப்படம் போலியானது என இலங்கை படைத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் நோக்குடன் சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்துள்ள ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளதாக, படைத்துறை அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆவணப்படம் வெளியிட்டுள்ளது.


அத்துடன் இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினர் போர் மீறல்களில் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஹைகோப் வழக்கில் சரத்திற்கு விடுதலை

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவை ஹைகோப் வழக்கின் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இவ் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்போது இந்த வழக்கை தொடர்ந்தும் நடத்த முடியாது என நீதிபதி (02ஆம் பக்கம் பார்க்க)



## அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தின் பின்னணியில் அமெரிக்காவுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவரும் ஆர்ப்பாட்டங்கள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ள நிலையிலேயே இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில அரசாங்கத்தின் ஆதரவோடு இடம்பெற்றுவரும இததகைய ஆர்ப்பாட்டங்களை அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் தலைவர்களும் பொறுப்புவாய்ந்த அமைச்சர்களும் அத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு வெளிப்படையாகவே தலைமை தாங்குவது குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அத்துடன் அமெரிக்க பொருட்களை புறக்கணிக்குமாறு (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதுவர் மன்னிப்புக் கேட்டார்

(சென்னை)

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளதாகவும், அவர்களை விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறிய இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசத்தை மத்திய வெளிவிவகார அமைச்சு நேற்று நேரில் அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளது. இதையடுத்து தனது கூற்றுக்காக அவர் பகிரங்க மன்னிப்புக் கேட்டார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் அனுமதியில்லாத பல் வைத்திய நிலையங்கள் நீதிமன்ற உத்தரவில் கருவிகள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி இயங்கி வந்த 10 பற் சிகிச்சை நிலையங்க்ளிலிருந்து மருத்துவ உபகரணங்கள் நேற்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.நகர்ப்பகுதி, மூளாய் போன்ற பகுதிகளிலுள்ள பற் சிகிச்சை நிலையங்களிலேயே இவ்வாறு மருத்துவ உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் யாழ். பிராந்திய பல் மருத்துவ அதிகாரி சண்முகராஜா பாலகுமார் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் இந்த சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இவ்வாறு அனுமதியின்றி இயங்கி வந்த 10 பற் சிகிச்சை நிலையங்களில் இருந்து மருத்துவ உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் கேட்டபோது,

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் பற் சிகிச்சை நிலையங்கள் தொடர்பாக தொடர்ச்சியான முறைப்பாடு எமக்கு கிடைத்த வண்ணமேயுள்ளன.

தகுதியில்லாத பற் சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றோம்.

பொதுமக்களிடமிருந்தும் வட மாகாண பல் வைத்தியர் சங்கத்திடமிருந்தும் பல முறைப்பாடுகள் வந்துள்ளன.

அண்மையில் கூட வயோதிபப் பெண் ஒருவருக்கு தவறான முறையில் பற் சிகிச்சை வழங்கப்பட்டு அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஒரே தடவையில் மூன்று பற்கள் பிடுங்கப்பட்டதனால் குருதி பெருமளவில் வெளியேறியது. இதனால் அவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டது என்பது எம்மால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தெரிய வந்தது.

அது மட்டுமன்றி பல் கட்டும் தகுதிகூட இல்லாத ஒருவர் குறித்த நோயாளிக்கு பல் பிடுங்கியிருக்கின்றார்.

எனவே அனுமதியில்லாத பற் சிகிச்சை நிலையங்கள், மூக்கு கண்ணாடியகங்கள் என்பவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## ஹைகோப் வழக்கில்...

சுட்டிக்காட்டினார். குற்றவியல் சட்டம் மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரகனடங்களுக்கு அமைய ஒரு நபருக்கு எதிரான ஒரே சம்பவம் தொடர்பில் இரண்டு வழக்குகளை தாக்கல் செய்ய முடியாதென மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தில் ஹைகோப் சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற வழக்கு விசாரணையும் மேல் நீதிமன்றத்தில் தொடர்பு பட்டிருந்த வழக்கின் விசாரணையும் ஒரே விதமானவை என மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அடிப்படை ஆட்சேபனை இதற்கு அமைய நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தீர்ப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-8,11)

New Science Hall & College
2014 Batch
Machanics
சனி ஞாயிறு - 12.30 - 1.30
ஆரம்பம் : 17.03.2012
By - R. குகன்
(7722)

## துணை மருத்துவ சேவையாளர்கள் முழு அளவில் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

அகில இலங்கை துணை மருத்துவ சேவையாளர்கள் இன்று தொடக்கம் முழுமையாகப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

நேற்று சுகாதார அமைச்சில் இடம்பெற்ற பேச்சவார்த்தை தோல்வியில் முடிந்ததையடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகூடப் பரிசோதனையாளர்கள், மருந்தாளர்கள், கதிரியக்கவியலாளர்கள், இயன் மருத்துவச் சிகிச்சையாளர்கள், தொழில் வழி சிகிச்சையாளர்களே இவ்வாறு பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவர்களின் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என மருத்துவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ந)

## இலங்கைத் தூதுவர்...

எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் மக்களவையில் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இவ்வாறு கோரிக்கை விடுக்கின்ற தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உள்ளதாகவும், அவர்களை விசாரணை செய்ய வேண்டும் எனவும் கூறிய தூதுவர் பிரசாத் காரியவாசம் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இச் செவ்வியில், தமிழகத்தில் உள்ள சில குழுக்களுக்கு விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்புகள் உள்ளது. இக்குழுக்கள்தான் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தூண்டிவிட்டு மத்திய அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றார்கள். இதனால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்ற னர்.

தமிழக அரசியல் கட்சிகளுக்கும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உள்ளது. இவர்கள் சேர்ந்துதான் மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி வருகின்றனர். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் குறித்து இந்திய அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரசாத் காரியவாசம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரசாத் காரியவாசத்தின் இச் செவ்வி குறித்து மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ராஜா உள்ளிட்ட தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதையடுத்து பிரசாத் காரியவாசத்தை நேரில் அழைத்த மத்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர், இவ்விவகாரம் தொடர்பில் அவருடன் அரை மணி நேரம் பேச்சுவார்த்தை நட்த்தியுள்ளார்.

இதற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரசாத் காரியவாசம், நான் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அளவில்லாத மரியாதை வைத்துள்ளேன்.

அவர்கள் குறித்து நான் மரியாதைக் குறைவாக எதனையும் பேசவில்லை. அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்றும் நான் சொல்லவில்லை. அதற்கான அதிகாரமும் எனக்கு இல்லை.

எனது கருத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருந்தால் நான் அதற்காக பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இதையே நான் இந்திய மத்திய வெளியுறவு இணைச் செயலாளரிடமும் தெரிவித்தேன்.

இதனிடையே, பிரசாத் காரியவாசத்தின் கூற்றுத் தொடர்பாக மக்களவையில் உரிமைமீறல் நோட்டீஸை தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா கையளித்துள்ளார். (ந-8,11)

## சனல் 4 ஆவணப்படம்...

ஈடுபடவில்லை மாறாக விடுதலைப் புலிகளே போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் மூன்று தசாப்த கால மாக பாரியளவில் மனிதவுரிமை மீறல்களை மேற்கொண்டனர். அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உண்டு.

சனல் 4 தொலைக்காட்சி அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் நோக்கில் போலியான தகவல்களை ஆதாரமின்றி வெளியிட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

இலங்கைப் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரால் பதிவு செய்யப்பட்ட இந்த ஆதாரங்கள் உரிய நிபுணர்களால் நுணுக்கமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உண்மையானது என உறுதி செய்யப்பட்டுள்ளது என சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்களுக்கு இலங்கையின் அதிகார பீடமே நேரடியான பொறுப்புடையவர்கள் என சனல் 4 தொலைக்காட்சி குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## வாழ்த்துச் செய்தி

### திருவாளர் சற்குணானந்தம் கைலாசநாதன்



தெல்லிப்பளை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய **திருவாளர் சற்குணானந்தம் கைலாசநாதன்** அவர்கள் வலிகாம வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு மேலும் அவர் பல பதவியுயர்வுகளை பெற வேண்டும் என வாழ்த்துகிறோம்.


வாழ்த்துவோர் :
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(7721)

ஆட்கள் தேவை
Elephant House Ice Cream வியாபார நிலையத்திற்கு முச்சக்கர வண்டி ஓட்டுனரும் [முச்சக்கர வண்டி ஓட்டுனரே வியாபாரம் செய்பவராக இருத்தல் வேண்டும்] இரவுநேர காவலாளி, காசாளர் [ஆண் பெண் இருபாலாரும்] தேவை.
தொடர்புகளுக்கு: 56, மணிக்கூட்டு வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
077 0910154, 021 4918407
(7720)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி லலிதா சண்முகலிங்கம்



எமது கல்லூரியின் பழைய மாணவனும் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளருமாகிய

**திரு. V.K. சண்முகலிங்கம்**

அவர்களுடைய அன்புத் துணைவியார்

**திருமதி லலிதா சண்முகலிங்கம்**

அவர்களின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அவரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலைச் சமூகம்
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(7715)

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு சின்னம்மா

புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சின்னம்மா நேற்று (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் அருணகிரிநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் பராசக்தி அவர்களின் அன்புத் தாயாரும், சந்திராதேவி, (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்திமாலா மற்றும் மகேஸ்வரன் (பிரதி கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி) அவர்களின் அன்பு மாமியும், ஈழவாணி (ஜேர்மனி), ஈழவேந்தன் (ஜேர்மனி), ஈழமானுஜன் (ஜேர்மனி), ஈழலோஜினி (ஜேர்மனி), செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன், சங்கீதன் (கனடா), கோபிகா, துர்க்கா, அச்சுதன் (பிரான்ஸ்), ஞானரதன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், செல்லத்துரை, அன்னபூரணி (வள்ளிப்பிள்ளை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்திட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

தகவல்: சி. மகேஸ்வரன்
(மருமகன்) (7718)

# இன்று ஒரு தகவல்

## பந்திக்கு முந்து

எனக்கு தெரிந்த ஒருவரை பல கல்யாண மண்டபங்களிலே பார்த்திருக்கிறேன். சாப்பாட்டுப் பந்தியிலே முதல் ஆளாக அமர்ந்திருப்பார்.

''ஏன் இப்படியாக முந்தியடிக்கிறீர்கள்? '' என்று கேட்டால்... ''பந்திக்கு முந்து! '' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உனக்குத் தெரியாதா? என்பார். அதன் பின்பு தான் அதைப் பற்றி நானும் சிந்தித்துப் பார்த்தேன்.

''பந்திக்கு முந்து – படைக்குப் பிந்து ''என்று உண்மையாகவே அந்த அர்த்தத்திலிலேதான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்களா...? விபரம் தெரிந்தவர்களைக் கேட்டேன்.

அது அப்படி ஒன்றுமில்லை. அவர்கள் தெரிவித்த விளக்கம் என்ன தெரியுமா?

அந்தக் காலத்திலே ராஜாக்கள் நான்கு வகையான படை வைத்திருப்பார்கள்.

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாற்படை. இந்த நாற்பெரும் படையையும் உடைய மன்னன் தான் சிறந்தவனாக இருப்பான்.

ஒரு ராஜா சண்டைக்குச் செல்லும் போது இந்த நான்கு வகையான படையும் அணிவகுத்துச்செல்லலும்.

முதலிலே யானைப்படை, அடுத்த படியாக குதிரைப் படை, அடுத்ததாக தேர்ப்படை... , கடைசியாக காலாற் படை என்ற ஒழுங்கிலே செல்லும்.

அந்த காலத்திலே போர்ப்பயிற்சி பெற்ற எல்லோரையும் படையிலே இணைப்பதில்லை.

தேவைக்கு அதிகமாக உள்ளவர்களையெல்லாம் பயிற்சி கொடுத்து வீட்டிற்கு அனுப்பி வைத்து விடுவார்கள்.

பகைவர்கள் படையெடுத்து வருகிறார்கள்... போர் ஆரம்பமாகப் போகிறது என்று தெரிந்தால் அதற்கு அறிகுறியாக போர்ப்பறை முழங்கும். முரசு ஒலி கேட்கும்.

இந்த ஒலி கேட்டதும் வீட்டிலே உள்ள வீரர்கள் எல்லாம் கையிலே கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஓடி வருவார்கள்.

அப்படை ஓடி வருகிறவர்கள்... படைக்குப் பிந்துவர். அதாவது ஏற்கனவே அணிவகுத்து நிற்கும் படைகளுடன் (யானை, குதிரை, தேர்) இவர்களும் பின்னால் போய் நிற்பார்கள்.

அப்படி நிற்கும் போது அந்தக் காலாட்படையிலே முதலில் நிற்பதற்கு ஆசைப்படுவார்கள். அதாவது பந்திக்கு முந்துவார்கள்.

பந்தி என்றால் வரிசை என்று அர்த்தம். அந்த வரிசைக்கு முந்த வேண்டுமென்றுதான் அர்த்தம்.

செய்து கொண்டு நாம் சாப் பாட்டு பந்தியிலே முண்டியடித்துக் கொள்கிறோம்.

ஒருவர் ஒரு கல்யாணப்பந்தியிலே எனக்கு அருகில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தற்செயலாக நான் திரும்பிப்பார்த்தேன். அவர் அழுது கொண்டிருந்தார்.

நான் பதறிப்போனேன். ''ஏன் சேர் அழுகிறீர்கள்'' என்று கேட்டேன்.

''இது அழுகையில்லை சேர்... ஆனந்தக் கண்ணீர்'' என்றார்.

''என்ன விபரம்'' என்று விசாரித்தேன். அவர் சொன்னார், ''சேர்... நானும் என்னுடைய 'லைஃப்லே' எத்தனையோ கல்யாணம் ''அட்டெண்ட்'' செய்திருக்கிறேன்... உணவு சாப்பிட்டிருக்கிறேன்.

ஆனால்... இன்றைக்குத்தான்... சாம்பாறுக்குத் தனியாகவும் ரசத்திற்குத் தனியாகவும் அப்பளம் போடுவதைப் பார்த்திருக்கிறேன். இரண்டு இரண்டு அப்பளத்தை ஒன்றாக பார்த்தும் உணர்ச்சிவசப்பட்டேன். அவ்வளவுதான்.

அப்படியென்று சொல்லிக் கொண்டு தனது மேல் துண்டை எடுத்து கண்ஓரத்தில் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கட்டடப் பொருட்கள் விற்பனைக்கு எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் அவசியம்

## பாவனையாளர் அதிகார சபை வலியுறுத்து

எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழ் இன்றி கட்டடப் பொருட்கள் விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அதிகாரசபை சிரேஷ்ட அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் சட்டவிரோதமாக பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொருட்களை நிர்ணயித்த விலை மற்றும் அச்சிடப்பட்ட விலை ஆகியவற்றிற்கு அதிகமாக விற்பனை செய்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை உரிய முறையில் காட்சிப்படுத்தாமலும் விலைப்பட்டியல் இன்றியும் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் இன்றி கட்டடப் பொருட்கள் விற்பனை செய்வோருக்கு எதிராகவும் தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக சீமெந்துப் பொதிகள், இரும்புக்கம்பிகள், பிளாஸ்டிக் குழாய்கள் என்பவற்றில் எஸ்.எல்.எஸ். பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் நடமாடும் வெதுப்பக உணவுவகை விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் குளிர்களிகள் விற்பனை நிலையங்கள் என்பவற்றிலும் விலைப் பட்டியல் கட்டாயம் வைக்கப்படல்வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் வர்த்தகர்கள் கவனமெடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சட்ட திட்டங்களுக்கு அமைவாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுமாறும் நுகர்வோருக்கு சிரமங்கள் ஏற்படாதவாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு என்.வி.கியூ சான்றி தழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இதில் தொலைக்காட்சி, றேடியோ திருத்துதல், விவசாய உபகரணங்கள் திருத்துதல் பயிற்சி, மின் இணைப்பாளர், வாகன திருத்துநர் பயிற்சிநெறி ஆகிய கற்கை நெறிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) வரை கற்றிருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் நைற்றா (NAITA) ஏ9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்திற்கு எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நேரில் சமுகமளிக்குமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார். (அ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 35 | 30 | 30 |
| தக்காளி | 07 | 20 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 10-15 | 15 | 15 |
| கரட் | 40 | 40 | 40 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 25 | 40 | 30 |
| வாழைக்காய் | 30 | 20 | 35 |
| சின்ன வெங்காயம் | 30-55 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 90 | - |
| பயற்றங்காய் | 60 | 80 | 50 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 15 | 30 | 30 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 200 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 35 |
| கீரை - 1 பிடி | 6-10 | 30 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 40 | 90 | 50 |

# இராசி பலன்

**16.03.2012**
**(பங்குனி 03, வெள்ளிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு**
**நவமி முன்னிரவு 9.09 மணிவரை**
**மூலம் முற்பகல் 8.44 மணிவரை**
**இராகுகாலம் 10.49-12.19 மணிவரை**
**சுபநேரம் 6.19-7.49 மணிவரை**
**அமிர்த சித்தம்**

**மேடம்** – மனத்தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பயனாளிகளால் பலனுண்டு.

**இடபம்** – சுபவிரயங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், பயணங்களால் அலைச்சலும், மனச்சோர்வும் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**மிதுனம்** – விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், நண்பர்களால் நன்மைகளுண்டு, விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், செல்வாக்கான நாள்.

**கடகம்** – சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** – பிள்ளைகளால் உதிரி வருமானாங்கள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**கன்னி** – விரதம், வழிபாட்டால் நம்பிக்கை கூடும் நாள், குடும்பத்தினர் உங்களின் சொற்களை கேட்டு நடக்க முன்வருவர், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்** – இளைய சகோதரர்களின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், செய் தொழிலில் முன்னெற்றமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** – வருமானம் அதிகரிக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் சாதகமான முடிவு கிடைக்கும்.

**தனுசு** – விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழமையான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** – குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** – எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தன வரவை பெருக்கிக் கொள்ள தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** – தொழில் சம்பந்தமான முக்கிய முடிவெடுப்பீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலை பேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும்.

வளவன்

# நவாலி கல்லுண்டாய் வெளியில் கழிவுகள் கொட்டுவதற்கு தடை

## விவசாய சம்மேளனம் நடவடிக்கை

(நவாலி)

நவாலி கல்லுண்டாய் வெளியில் கழிவுப் பொருட்கள் கொட்டுவதற்கு தடைசெய்யப் படவுள்ளது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் நிலவளம் சம்பந்தமான கருத்தரங்கிலே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்தோடு நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் சட்ட ரீதியாகவோ அல்லது சட்ட விரோதமாகவோ மண் அகழ்தல் தடை செய் யப்படவுள்ளது.

கல்லுண்டாய் வெளியில் அமைக்கப் பட்ட உப்பளத்தினால் நன்னீர் கிணறு மற் றும் வயல் நிலங்கள் என்பன உவர்தன்மை யாக காணப்படுகின்ற வேளை கழிவுப் பொரு ட்களை கொட்டுவதனால் அதிகமாக மாசு படுகின்றது.

எனவே கழிவுப்பொருட்கள் கொட்டுவதை தடை செய்வதே சிறந்தவழி என தீர்மானிக் கப்பட்டது. அத்துடன் வயல்நிலங்களில் பொலித் தீன் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின் றது. இதனால் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதென இக்கருத்தரங் கில் கலந்து கொண்ட விவசாயிகள் கருத்து தெரிவித்தையடுத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனால் கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் பாதிப்படைவதுடன் நுளம்பு, இலை யான் என்பன அதிகரித்து காணப்படு கின்றது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் பிர தேச செயலருக்கும் பிரதேச சபைத் தவிசாள ருக்கும் அனுப்புவதெனவும் இக்கருத்தரங் கில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களின் பொது அமைப் புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பொது அமைப்பு ஒன்றை உரு வாக்கி அதன்மூலம் மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ-3-26)

## 44ஆவது ஆண்டு நிறைவு விழா

ஏழாலை முத்தமிழ் மன்றத்தினதும் சனசமூக நிலையத்தினதும் 44-வது ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் நா.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் கலந்து கொள்வார். ஏழாலை பாடசாலை களில் கல்வி கற்று 5 ஆம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட் சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சேவை நலன் பாராட் டுதலும் பட்டமளித்து கௌரவமளித்தலும் நடை பெறும். (அ-78)

## அதிபர் பதவிவெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேலணை மேற்கு நடராசா வித்தி யாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற் பட்டுள்ளது என தீவக வலயக் கல்விப் பணிப் பாளர் வி. ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, தரம் 2- I இனைச்சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண் ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும் என வும் விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திக திக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறி வித்துள்ளார். (அ-7)

## கோட்டக்கல்விஅதிகாரி பதவிவெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்தில் வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரி பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என தீவக வலயக்கல்வி பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித் துள்ளார்.

இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை I அல்லது 2-I ஐ சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கு மாறு தெரிவித்துள்ளார். (அ-7)




## வயோதிபர் மீது இளைஞர் தாக்குதல்

(கரவெட்டி)

வயோதிபர் ஒருவர் மீது இளைஞர் ஒரு வர் கடுமையாக தாக்கியதில் வயோதிபர் தலையில் பலத்த காயங்களுடன் சிகிச்சைக் காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மணற்காடு குடத்தனை பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, வயோதிபரின் உறவு முறையான இளை ஞர் ஒருவருக்கும் வயோதிபருக்கும் ஏற்பட்ட துவிச்சக்கரவண்டி கொடுக்கல் வாங்கல் தகராறு காரணமாக வயோதிபர் மீது கொட் டனால் இளைஞர் கடுமையாக தாக்கி யுள்ளார்.

இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த வாரிமுத்து கேசவபாலன் (வயது 65) என்ற வயோபதிபரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-24)

## திருடிய பெண்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வீதியில்சென்றபெண்ணிடம்நகைகளினை திருடினர் என குற்றஞ்சாட்டப்பட்ட இரு பெண்கள் யாழ். பொலிஸாரால் கைது செய் யப்பட்டு யாழ். நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்கமறிலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று இச்சம் பவம் கொழும்புத்துறையில் இடம்பெற் றுள்ளது. குறித்த பெண்ணிடம் இரண்டு இலட்சத்து 62 ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான தங்க நகைகளை குறித்த இரு பெண்களும் திருடியுள்ளனர்.

இவ்விரு பெண்களில் ஒருவர் கோவிற் குளம் மன்னாரையும் மற்றையவர் புங்குடுதீ வினைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்விரு பெண்களும் சம்பவ தினமன்றே யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதவான் மா. கணேசராஜாவின் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் சந்தேக நபர்களான குறித்த இரு பெண் களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டார். (அ-4)

## மரண அறிவித்தல்கள்

### குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம்



பண்டத்தரிப்பை பிறப்பிடமாக வும் உடுவில் தெற்கு யாமாச் சந் தியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம் நேற்று 15.03.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான தம்பையா செல்லம்மா தம் பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான விநாயகமூர்த்தி பறுபதம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தெய் வானைப்பிள்ளை, ஆனந்தகுமார சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஜோதி, தர்மகுலரட்ணம் (குல சேகரம்பிள்ளை அன்ட் சன்ஸ்), யோகேஸ்வரன், ஜெகசோதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், பிறேமா, கலாவதி, கணேச ரட்ணம், சிவசுத்தானந்தன் (சிவன் ஸ்ரோர்ஸ், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐங்கரன் (இத்தாலி), பத்மஜோதி (சுவிஸ்), வர்ஷினி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சுஜாகரன் (பிரான்ஸ்), பிரதீபா (கனடா), பிரதீபன் (கனடா), பிரவீனா, சயானா, சாயிறா, கோமதி, சிவாகர் (கனடா), பிரியதர்சன் (இத்தாலி), சிவதர்சினி (பிரான்ஸ்), பிரியதர்சினி (நுண்கலைப்பீடம் நான்காம் வருடம்), ரேணுகா, சிவானுஜன், சாருஜன், நந்தகுமார் (சுவிஸ்), பிரணவன் (Kevilton Electrical Product (Pvt) Ltd.), சயந்தன் (கனடா), தினேசன், முருகதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நயனிகா (சுவிஸ்), நந்தனா (சுவிஸ்), சிவப்பிரஹா, மிதுஷன் (கனடா), சமிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16.03.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

யாமா சந்தி, உடுவில் தெற்கு, மானிப்பாய். (7714)

### கந்தையா கமலம்



நாவாந்துறையை பிறப்பிடமாகவும் கற்குளம் கொட்டடியினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கமலம் அவர்கள் 15.03.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி பெரியபிள்ளையின் அன்பு மகளும் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னர் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பூமணி, அருமைநாயகம், கண்ணுசாமி, சின்னராசா, கனகரத்தினம், செல்வதியம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கந்த சாமி, இராஜலிங்கம், சண்முகலிங்கம், நித்திய பூபதி, சந்திராவதி, அம்பிகாவதி (லில்லி), உதயராசா, சமுத்திராகரன் (சதிஸ் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, லீலாவதி, சிவலிங்கம், பாலச்சந்திரன், இராஜலக்சுமி, வாசுகி (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16.03.2012 இன்று வெள்ளிக்கிழமை மதி யம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக் காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

14, கற்குளம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (C-6094)

# முதலுதவி கருத்தரங்கு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவினரால் கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முதலுதவி கருத்தரங்கு வித்தியாலய அதிபர் திருமதி எஸ்.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் உபதலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, டாக்டர் பா.சயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என கோப்பாய் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் அறிவித்துள்ளார். (அ-134)


# UNIVERSITY OF JAFFNA,SRI LANKA

## VACANCY

## POST OF WORKS ENGINEER (CIVIL) GRADE II

Applications are invited by me up to 20.04.2012 from suitably qualified persons for the post of Works Engineer (Civil).

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the office of the senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on a payment of Rs 100/- for each application form at the peoples' Bank,University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order/ postal Order to the value of Rs 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs 5/- Stamped envelope of 23x10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Works Engineer" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office Registrar on or before 20.04.2012

QUALIFICATIONS

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University/ Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers.

and

(B) A minimum of five(05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage,road and electrical installation. should also possess experence in handling contracts as well as managing direct labour

Method of Recruitment: selection by a structured interview.

Applicants who have scored 40%marks or above at the interview are eligible to be considered for selection.

Salary scale: UEX2 (III)33,745-8x645; 8x790-45,225/- p.m

AGE: Not more than45 Years.this age limite will not be applicable to those candidates who are employed in the pubic or sector organization.

STATUTORY BENEFITS

1.Allowances approved by the University Grants Commission
2.Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3.Gratuity payment
4.Employment Trust Fund benefits
5.Free medical care

Applicants from Government Departments, state Corporations and statutory Bodies should apply through the Heads of respective tnstitutions. advance copies of applications may be sent in the first intance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna.
15.03.2012.

(C-6093)


# வவுனியாவில் அங்காடி வியாபாரத்தை அகற்ற பொலிஸார் மூலம் அறிவுறுத்து

வவுனியா நகரசபை பிரதேசத்தில் அதிகரித்து வரும் அங்காடி வியாபாரிகளினால் மக்கள் எதிர்நோக்கும் பெரும் இடையூறுகளை கருத்தில் கொண்டு அங்காடி வியாபாரிகள் மற்றும் வீதியோரங்களில் வைத்து வாகனங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமைக்கிடையில் அங்காடி வியாபாரத்தை அகற்றுமாறு நகரசபை ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் மூலமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நகரசபை தலைவர் ஐ.கனகையா கருத்து தெரிவிக்கையில்,

வவுனியாவில் சிறந்த முறையில் சுகாதார பகுதியினரும் நகரசபையினரும் டெங்கு கட்டுப்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் வீதியோர வியாபாரத்தால் பல்வேறு இடையூறுகளை நகரசபை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக அங்காடி வியாபாரிகள் கால்வாயின்மேல் வைத்து வியாபாரத்தை மேற்கொள்வதால் வடிகாலை துப்பரவு செய்ய முடியாதுள்ளது.

பொலித்தீன் மற்றும் வெற்றுப் பொருட்களை வீதிகளில் எறிவதன் காரணமாக அவற்றில் நீர் தேங்கக்கூடிய நிலை காணப்படும்.

மேலும் வீதிகளில் மக்கள் செல்ல முடியாத அளவிற்கு வியாபாரம் பெருகியுள்ளது. அது பொது மக் களுக்கு இடையூறாக அமைந்துள்ளதுடன் மக்களின் நடைபாதை அனைத்தும் அங்காடி வியாபாரிகளின் இடமாக்கப்பட்டுள்ளது.

எனவே, அவர்களை அகற்ற வேண்டிய தேவையுள்ளது. அதன் காரணமாக இதுவரை 170 அங்காடி வியாபாரிகளுக்கு வெள்ளிக்கிழமைக்கிடையில் அங்காடி வியாபாரத்தை அகற்றுமாறு நோட்டீஸ் வழங்கி வருகின்றோம். அவர்கள் கால அவகாசத்திற்கு பின்னரும் தொடர்ந்து வீதியோர வியாபாரத்தில் ஈடுபடுவார்களேயானால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என தெரிவித்தார்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டும் கால அவகாசத்தை கருத்தில் கொள்ளாது வீதியோரங்களில் வைத்து மீன் வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிரந்தர வர்த்தக நிலையங்களை கொண் டுள்ளவர்களும் வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் வைத்து வியாபாரம் செய்வதனால் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு காணப்படுவதனால் நிரந்தர வர்த்தக நிலைய வர்த்தகர்களும் அவற்றை வர்த்தக நிலையத்தினுள் வைத்து வியாபாரம் செய்ய வேண்டுமெனவும் இது தொடர்பில் வர்த்தக சங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டார். (அ-7)


af

## AFRICAN MOVIES - JAFFNA

**Alliance Francaise de Jaffna**

cordially invites you to the screening of

THE LION - CHILD

**A film by Patrick Grandperret (France)**

This is the tale of an African slave- child and a lioness, born the same day...
A movie with real- life lions. (1993,86 min)

on

**Saturday 17 March 2012 at 2:00p.m**

at

**Alliance Francaise de Jaffna,**
61, Kachcheri- Nallur Road, Jaffna.

Free entrance. French with English subtitles.
Much convenient for children too.

(7708)



# ஆசீர்வாத பெருவிழா!

தெய்வத்தின் திருப்பாதத்தில்



இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின்

3புவது வருட சுவிசேஷ மாநாடு

அன்பின் வாசகர்களே! வானத்தையும் பூமியையும் படைத்த தெய்வம் மனித அவதாரம் எடுத்து, பிரம்ம புத்திரனாக, ஆண்டவராகிய இயேசு எனும் நாமத்தில் இரட்சகராக, மானிடனைத் தேடி பூமிக்கு வந்தார். இன்றும் அவர் ஜீவிப்பதினால் அந்த தெய்வம் உங்களை அரவணைக்க ஆவலோடு இருக்கிறார். எனவே சமாதானமற்ற உள்ளங்களுக்கு சமாதானத்தை அருளவும், தீராத நோய்கள், துன்பம், கண்ணீர் நிறைந்த வாழ்விலிருந்தும், இருள், பில்லிசூனியம், மாந்திரீகக் கட்டு, பிசாசின்பிடி, தீமையான பாவக் கட்டுகளிலிருந்தும் விடுதலை தரவும், நிம்மதி, ஆறுதல் அளிக்கவும் உங்களைத் தேடுகிறார். அவர் நாமத்தினால் மட்டுமே மனுக்குலத்திற்கு விடுதலை இருப்பதினால் ஜாதி, மத, இன, பாகுபாடின்றி உங்கள் வாழ்வு சுபீட்சம் அடைய அனைவரையும், அன்புடன் அழைக்கிறோம்.

இதுவே உங்கள் அற்புதத்தின், அதிசயத்தின் நாட்கள்! தெய்வீக சுகமளிக்கும் நாட்களை நழுவவிடாதீர்கள். தேவ கிருபை, அருள் பெற வாரீர்.

இடம்:- நகரசபை மைதானம்
(துரையப்பா மைதானம் அருகில்) யாழ்ப்பாணம்.

காலம்:- 2012 மார்ச் 16,17,18/மாலை 5.00 மணி

செய்தி:-
M.R. இராஜேந்திரம், C.V. இராஜேந்திரம்

மைதானத்திலிருந்து பஸ் சேவை இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(7458)

34வது வேதாகம கருத்தரங்கு! பிரவேசம் இலவசம்!

காலம் - மார்ச் 13 முதல் 17ம் திகதி வரை நேரம் - காலை 9.00 - 1.00
இடம் - A.O.G. சபை, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்

For Information:- Jesus Lives Evangelical International Ministry
T.P. 2522608, Fax - 2525695, Web- jesuslives lk.com
Jaffna Contact- Rev. Rajasooriyar 0777238300, 0779946524, 0758487994, 0755048503

# ஜெனீவா பிரேரணை நிறைவேற்றப்படின் மீண்டும் 1983 ஆம் ஆண்டின் நிலை ஏற்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஜெனீவாவில் பிரேரணையை சமர்ப்பித்துள்ளது. அது நிறைவேற்றப்பட்டு சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இராணுவ வீரர்கள் உட்படுத்தப்பட்டால் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்டதை போன்ற இனக்கலவரம் இலங்கையில் இடம் பெறும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.**

நாட்டில் மீண்டும் இனங்களுக்கிடையில் பிரச்சினை உருவாக்கும் வகையில் மேற்குலக சமூகம் செயற்படக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவுடனும் ஏனைய தீய சக்திகளுடனும் இணைந்து இலங்கைக்கு எதிராக செயற்படுவதை உடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் இது தொடர்பில் தொடர்ந்து கூறுகையில், அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கடுமையாக செயற்பட்டு வருகின்றது. இதில் மேற்குலக நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொண்டு நாட்டை மீண்டும் சீரழிக்கும் பிரேரணையை ஆதரித்து பேசி வருகின்றது.

எவ்வாறாயினும் புலிகள் இலங்கையில் ஒழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையும் நிரந்தர சமாதானமும் ஏற்பட்டுள்ளது. இதனை சீர்குலைக்கும் வகையிலேயே அமெரிக்காவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டு வருகின்றன.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை சமர்ப்பித்துள்ள அமெரிக்கா அதன் ஊடாக இலங்கை இராணுவத்தை சர்வதேச விசாரணைகள் பொறிமுறைக்குள் சிக்க வைத்து தண்டனைகளை வழங்கவே முயற்சிக்கின்றது. புலிகளை அழித்திருக்காவிட்டால் இன்று இலங்கை இவ்வாறான சவால்களை ஒருபோதும் எதிர்கொண்டிருக்காது என்றார்.

(அ-7)

# கப்பம் கோரிய மூவர் கைதாகினர்

(கொழும்பு)

ஐந்து இலட்சம் ரூபாவை கப்பமாக பெற்றுக் கொள்ள முற்பட்ட மூன்று பேரை பன்னல நகரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநாமதேய தொலைபேசி அழைப்பின் மூலம் கப்பம் கோரியதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து சாமர்த்தியமான முறையில் சந்தேக நபர்களை கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

(அ-7)

# வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு இரு நாட்கள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு பயிற்சிப்பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையிலுள்ள சிற்றூழியர்களிடமிருந்து செயற்றிறன்மிக்க சேவையினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இப்பயிற்சிப் பட்டறை அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப்பயிற்சிப் பட்டறையானது யாழ். போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்ற ஆளணிப் பற்றாக்குறையினை ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடியதாக அமைவதோடு ஊழியர்களிடமிருந்து வினைத்திறன் மிக்க சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பயிற்சிப்பட்டறையினை நடத்துவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இரண்டு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இப்பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி நடைபெறவுள்ளது.

(அ-4)

# அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சை அழைப்பு கடிதங்கள் தனிச்சிங்களத்தில்

## ஜனாதிபதியிடம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கல்வியமைச்சில் தற்போது நடைபெற்று வரும் இலங்கை அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சை கடிதங்கள் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

நாட்டில் அரச கரும மொழியாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் உள்ளன. அதைவிட ஜனாதிபதியின் மும்மொழிக் கொள்கை, இரு மொழிப் போதனை, மொழி ஒருமைப்பாட்டு அமைச்சு உள்ளிட்ட பல அமைப்புக்கள் மொழி புறக்கணிப்பு இடம்பெறக்கூடாது தமிழும் இந்நாட்டு அரச கரும மொழியே என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் இலங்கையின் முக்கிய அமைச்சுக்களில் ஒன்றான கல்வி அமைச்சு இலங்கை அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் கடிதம் தனிச் சிங்களத்தில் அமைந்திருப்பது கண்டனத்துக்கும் வேதனைக்கும் உரியது.

குறிப்பாக தமிழ்மொழி மூல பரீட்சைகளுக்கு சிங்கள மொழி மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமை பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளானதுடன் பல பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன.

குறிப்பாக நேர்முகப்பரீட்சை கடிதத்தில் கோரப்பட்ட முதலாவது ஆவண பிரதிபலபத்ரய என சிங்களத்தில் குறிப்பிட்டிருந்தது. அதாவது பெறுபேற்றுச்சான்றிதழ், இப்பெறுபேறு எதற்கான பெறுபேறு? கா.பொ.த. (சாதாரண தரம்), கா.பொ.த(உயர் தரம்) பரீட்சையின் பெறுபேறா? பட்டச்சான்றிதழ் கல்வி டிப்ளோமா சான்றிதழா? அதிபர் பரீட்சைச் சான்றிதழா? எனத் தெரியாமல் விருப்பத்திற்கேற்ப கொண்டு சென்றனர்.

ஆனால், நேர்முகப் பரீட்சையில் அதிபர் பரீட்சை பெறுபேறு கோரப்பட்டது. பலர் விழித்தனர் சங்கடப்பட்டனர்.

எனவே, இனிமேல் அனுப்புகின்ற கடிதங்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் வெளிவருவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதுவும் தெளிவாக ஆவணங்கள் கோரப்பட வேண்டும். தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என உரக்க கோருவோரும் தமிழ் மொழிக்காக போராடுவோரும் இவ்விடயத்தில குரல் கொடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

(அ-2)

# மொழிப் பிரச்சினைக்கான தீர்வு இனப் பிரச்சினையை தீர்த்து விடும்

## ஜனநாயக இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டில் தமிழ்,சிங்கள மக்களுக்கிடையில் நிலவுகின்ற மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் இயல்பாகவே இனப் பிரச்சினைக்கும்தீர்வு காணப்பட்டு விடும்.

அதற்காக தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும் கற்பதன் மூலம் இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கலாம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பாளருமான கே.பரணிகரன் தெரிவித்தார்.

இனங்களுக்கிடையிலே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த சாதனமாக மொழிச் சங்கங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்படுகின்ற மொழிச்சங்கங்கள் ஊடாக தமிழ் மக்கள் சிங்கள மொழியை கற்றுபுரிந்த கொள்ளக் கூடியவர்களாக மாறுகின்ற போது எமது பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு மனம் விட்டு தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எமது நாட்டு பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு மொழிப் பிரச்சனையும் ஒரு தடையாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் சிங்களத்திலும் சிங்கள மக்கள் தமிழிலும் உரையாடும் போது சாதாரண மக்களின் உறவில் நெருக்கமும் ஆதரவும் அதிகரிக்கும் என்றார்.

(அ-2)


**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**VACANCY**

**POST OF WORKS ENGINEER (ON ASSIGNMENT)**

Applications are invited by me up to 26.03.2012 form suitably Qualified persons for the post of **works engineer** (Civil) (on Assignment) For six months.

Candidates,who are interested to apply for the post are requested to forwarded their **cv** addressed to senior Assistant Registrar/ Establishments (Non-Academic) on or before 26.03.2012 candidate may also forward their **CV** to the Mail: estna@jfn.ac.lk

**QUALIFICATIONS**

A) Should passess a.B.Sc Engineering Degree specializing in civil Engineering from a recognized University/ Higher Educational institution or an Associate Member of a recognized Institute of Engineers

and

B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings,water Supplies, drainage, road and electrical installation. should also Passess experience in handling contracts as well as managing direct labour.

**Method of Recruitment :** Selection by a structured interview

**Salary Scale :** Fixed Salary Rs.40,000.00

**REGISTRAR,**
**University of Jaffna.**
**15.03.2012**

(C-6092)

# நீ களைப்படைந்து விட்டாயா?

தான் விரும்பியதை எல்லாம் அடைந்த ஒரு சக்கரவர்த்தி இருந்தார். ஆசியாக்கண்டம் முழுவதும் அவருடைய ஆட்சியின்கீழ் இருந்தது. இலட்சக்கணக்கான மக்கள் அவர் கட்டளைக்கு கீழ்ப்படிந்தனர். ஒரு கை சொடுக்கில் அவரால் இந்த உலகிலுள்ள எதையும் அடைய முடியும். ஆனால், இவை எதுவும் அவர் வீட்டைச் சென்றடைய உதவவில்லை. இது அவருக்கு மிகுந்த சோர்வைத் தருகிறது.



ஆன்மீக ஞானம்பெற ஒவ்வோர் இடமாக அலைந்தார். சில விடயங்களைச் சேகரித்தார்- அது அவருக்குச் சிறிது காலமே பயன்பட்டது. இறுதியில் மிகவும் சோர்வடைந்து எல்லாவற்றையும் உதறித்தள்ளினார். ஆனால், அதுவும் அவருக்குப்பயன் தரவில்லை.

சக்கரவர்த்தியாக இருப்பதிலும் பயனில்லை; அதைத் துறந்ததிலும் பயனில்லை. ஒரு நாள் ஒரு மரத்தருகில் களைப்புற்று விழுந்தார். அவரால் ஒரு குருவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி குருவைக் கண்டாலும், அவரை அடையாளங் கண்டுகொள்வது அவ்வளவு சுலபமில்லை. அது இலையுதிர்காலம். அந்த விநாடி, ஒரு காய்ந்த இலை மரத்திலிருந்து விழுந்தது. அவர் அந்த இலையையே பார்த்துக்கொண்டிருந்தார். அது காற்றுடன் கிழக்கே பறந்து சென்றது. பிறகு காற்று வடக்கு நோக்கி வீசியபோது வடக்கே சென்றது. அது காற்றுப் போகும் திசையெல்லாம் மிதந்து சென்றது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அவர் தலையில் பொறி தட்டியது. தானே கர்த்தா என்ற எண்ணமும் ஆசைகளும் அவரை விட்டு நீங்கின. அத்தருணத்தில் அவர் அந்த நிகழ் வினாடியே முடிவற்றது, நிலையானது என்பதை உணர்ந்தார். அவர் வீட்டிற்கு (சுயத்திற்கு) திரும்பிவந்தார்.

தெய்வத்தால் கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு நிகழ்வினாடியுடன் சேர்ந்து மிதத்தல், கடந்ததை எண்ணி-வருந்தாமல் எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகள் இல்லாமலிருத்தல், ஒரு காய்ந்த சருகைப் போல், வாழ்க்கையை அந்த விதமாய் வாழ்பவர்- ஞானசித்தி பெற்றவர் என்று சொல்லப்படுகிறது.

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

ஒவ்வொரு முறை நீ மகிழ்வற்றும், துயருற்றும், தொல்லைப்படும் போதும் நீ உன் எல்லைகளை உணர்கிறாய்... உன்னால் என்னசெய்ய முடியும்?

நீ நன்றி உணர்வை உணரலாம். "ஓ... இதுதான் என்னால் ஆனது எனும் எல்லைக்கு வந்துவிட்டேன்" என்று பிறகு அந்தத் தருணம்- அந்தச் சூழல்- அனைத்தையும் பிரார்த்தனையாக்கு. "எங்கும் அமைதி நிலவட்டும்" எனக்குள் மட்டுமல்ல, எல்லாரிடமும் அமைதி நிலவட்டும். உன் உணர்வின் எல்லையை நீ உணர்ந்த அந்தத் தருணமே வழிபாடாகும்.

அந்த வரையறைகளும் எல்லைகளும்தான் உன்னுடைய துன்பங்களுக்கு மூலகாரணம். நீ உன் எல்லைகளைத் தொடாதவரை, மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருந்தாய். நீ, அவற்றைத் தொட்ட அத்தருணத்தில் உன் மனம் புலம்ப ஆரம்பித்து விடுகிறது. "ஓ... அந்த மனிதர் இதைச் செய்ததால் அது நடந்தது. இது மிகவும் கெட்டது; அது அப்படி இருக்கக் கூடாது- இது இப்படி இருக்க வேண்டும்- இது இந்த வழியில் இருக்கக்கூடாது" என்று. அத்தருணத்தில் உன்னால் என்ன செய்ய முடியும்?



## ஆன்மீகம் 07

முடியும்- அது தான் அன்பு.

ஹிந்தி மொழியில்அன்பு என்னும் வார்த்தை இரண்டரை எழுத்துக்களால் எழுதப்படும். அங்கு ஒரு வழக்கு மொழியுண்டு. யார் உண்மையான குரு? ஒரு பண்டிதரா அல்லது ஞானியா? அல்லது வேதங்கள் பல கற்றவரா? யார் அந்த இரண்டரை எழுத்தைக் கற்றவர் அவர்தான், வேதங்கள் பல கற்றவரல்ல. அந்த இரண்டரை எழுத்து வார்த்தைதான் இக்கணம். அது அந்த நொடிக்கான சோதனை நீ உன் எல்லைகளால்

# நீ மகிழ்ச்சியாக நிம்மதியாக இருக்கிறாயா?

"ஓ... இறைவா நீ என்னால் எவ்வளவு முடியும் என்பதை உணர வைத்தாய்! இப்போது எனக்கு அமைதியைத்தா! நீ செய், நான் எல்லாவற்றையும் உன்னிடமே தருகிறேன்!" என்று மட்டுமே சொல். அந்த நொடியில் நீ புன்னகைக்கத் தொடங்குவாய்; அங்கே நிம்மதிப் பெருமூச்சுவரும். அந்தச் சூழல் எவ்வளவு கதியற்ற நிலையிலிருந்தாலும், உன்னால் அதன் வழியே நடக்கமுடியும்- பாடமுடியும்- ஆட

பிணைக்கப்பட்டிருக்கிறாயா அல்லது உன்னால் உன் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடிகிறதா? எதையும் எடைபோட்டுப்பார்க்காத குணமும், கள்ளங்கபடமற்ற அன்பும் உன் இதயத்தில் பெருகுகிறதா என்று கவனி. அது தொடர்கிறதா, அப்படியானால், அதில் உன்னால் உறுதியாக இருக்க முடிந்தால், இந்த உலகத்தில் உள்ள எதாலும், உன் அமைதியைத் திருட முடியாது.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

07

### கிரகங்களும் இரேகைக் குறிகளும்

கையில் கிரகமேடுகளைக் கவனிக்கும்போது அதில் ஆங்காங்கு அமைந்திருக்கும் இரேகைக் குறிகளையும் கவனிப்பதும் அவசியமாகும். இந்த ரேகைக்குறிகள் பதினாறு வகைகளாகும். இவை களைப் படத்தில் கவனிக்க. கையில் கிரக மேடுகள் அமைந்திராவிடினும் இரேகைக்குறிகள் இருக்கலாம். படத்தில் காணப்படும் ரேகைக் குறிகள் ஒன்றிரண்டோ அல்லது அதற்கு அதிகமாகவோ சிற்சில கைகளில் காணப்படும். இந்த ரேகைக் குறிகள் தனித்தனி நிறத்தோடும் தோன்றக்கூடும். படத்தில் காணப்படும் கையிலுள்ள இரேகைக் குறிகளில் முதல் ஒன்பது இரேகைக்


சக்தி

குறிகளும் மேல்நாட்டாருக்கு அனுபவத்திலிருந்து வருகின்றன. மீதமுள்ள ஏழு ரேகைக்குறிகளும் நம் தமிழ் நாட்டில் வழக்கத்திலிருந்து வருகின்றன. இப்பதினாறு ரேகைக்குறிகளும் கிரகங்களைப்போலவே, வாழ்வில் நிகழக்கூடிய சில முக்கியமான விடயங்களைக் குறிப்பிடுவனமாகும். ஒரு கிரகமேட்டிலிருக்கும்போது நன்மைசெய்யும் ஒரு ரேகைக் குறி, மற்றொரு கிரகமேட்டில் காணப்பட்டால் அது தீமையைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகும். ஆகையால் கைகளிலுள்ள இரேகைக் குறிகளைப் பார்த்து பலாபலன்களைக் நிச்சயிக்கும்போது வெகு ஜாக்கிரதையுடன் நிச்சயிக்க வேண்டும்.

1. சிறு புள்ளி. இது சிறிது பள்ளமாயிருக்கும் இது கைநிறத்துக்கு மாறுபட்ட நிறத்தோடு விளங்கும். இந்தப்புள்ளி சிவப்பு, நீலம், கறுப்பு, வெள்ளை முதலிய நிறமாயும் இருக்கும். வட்டமாகவும் சிறிது கோணலாகவும் அமையும்.
2. வட்ட வளையம்.
3. தீவுக்குறி.
4. சதுரம்.
5. இரண்டு சிறு ரேகைகளின் சந்திப்பு.
6. முக்கோணம்.
7. சூலக்குறி அல்லது கிராஸ்.
8. வலைக்குறி.

# ரேகைகளும் கிரகங்களும்

9. நக்ஷத்திரக்குறி. இது கிராஸிக்கு மேல் ஒன்று அல்லது இரண்டு குறுக்கிட்ட கோடுகளாய் அமையும்.
10. குடை.
11. சக்கரம்.
12. சங்கு.
13. மச்சம்.
14. பிறை.
15. சக்திவேல்.
16. திரிசூலம்.




இவைகளில் எட்டாவது இரேகைக் குறியாகிய வலைக்குறி சுக்கிர மேட்டிலிருப்பது நன்மையாகும். 13-வது ரேகைக்குறியாகிய மச்சக்குறி ஆயுள் ரேகையின் கடைசியிலும் குருமேட்டிலுமாக இருந்தால், அது முதிர்ந்த ஞானம் உண்டாகும் என்பதைக் குறிப்பதாகும். 10-வது ரேகைக் குறியாகிய குடையும் 11-வது ரேகைக் குறியாகிய சக்கரமும் 12-வது குறியாகிய சங்கும் 15-வது குறியாகிய சக்தி வேலும் அருளுடையார்க்கே அமையும். இந்நான்கும் மிகுந்த பலனைத் தரக் கூடியவை.

### குருமேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்

ஒருவர் கையில் குருமேட்டுக்கும் மத்தியில் ஒரு சிவந்த இரேகைக் கோடு இருந்தால், அது அவரது குடலில் பலவீனத்தைக் காட்டுவதாகும். குருமேட்டில் இரேகை தனியாக செங்குத்தாக இருந்தால், அது நல்ல இலாபம் வருவதைக் குறிப்பதாகும். இம்மாதிரியான இரேகை எந்தக் கிரக மேட்டிலிருந்தாலும், இதே நல்ல பலனைத் தரும்.

ஒருவர் கையில் இரண்டு இரேகை செங்குத்தாயிருந்தால், அவை அவரது அபிலாஷை இரண்டுபட்டு அவருக்கு அபஜெயம் உண்டாகும் என்பதை குறிப்பதாகும். குரு மேட்டிலுள்ள ஒரு இரேகையின் மேல் இருதய இரேகை குறுக்கிட்டு அது சூலமாயிருந்தால், அவருக்கு அன்பினால் உதிக்கும் பாசத்தால் துரதிர்ஷ்டம் உண்டாகும் என்பதை அது குறிப்பதாகும். அந்த அன்பின் பிணைப்பு அவருக்கு கோரமாய் முடியும்.

ஒருவர் கையில் மூன்று அல்லது நான்கு சிறு இரேகைகள் அடுக்கடுக்காய் ஏணிபோலத் தோன்றினால், அவை அவருக்கு அடுத்தடுத்து வரும் நஷ்டத்தைக் குறிப்பதாகும்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


## யுனிகோட் (Unicode)




யுனிகோட் கொன்சோட்டியம் (Unicode Consortium) என்பது உலகளவில் கணனி பயன்பாட்டு முறைகளைச் சீரமைத்து ஒழுங்குபடுத்தும் சர்வதேச அமைப்பு. சர்வதேச கணனி நிபுணர்கள், முன்னணி கணனி நிறுவனங்கள், அரசுகள், தன்னார் வலர்கள் எனப் பல தரப்பினரும் அங்கம் வகிக்கும் அமைப்பு இது. ஆங்கிலத்துக்கு நிகராக இதர மொழிகளைச் சார்ந்தவர்களும் கணனியினால் கையாளும் திறனை எளிமைப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம். இதற்காக கணனியில் பாவிக்கும் உலக மொழிகள் ஒவ்வொன்றுக்கும் சர்வதேச அளவிலான பயன்பாட்டுப் பொதுத்தன்மையை வகுத்தளிக்கும் தலையாய பணியை யுனிகோட் செய்து வருகிறது.

0,1 என்ற இரு எண்களைக் கொண்டு தான் (அல்லது இவ்விரு எண்களின் வெவ்வேறு கூட்டணிகளைக் கொண்டு) தனக்குள்ளே செலுத்தப்படும் எந்த விடயத்தையும் கணனி பதிவு செய்து கொள்கிறது.

ஒரு மொழி யைக் கணனியில் பயன்படுத்த வேண்டுமென்றால் அந்த மொழியின் ஒவ்வொரு எழுத்துக்கும்ஒரு எண்ணை ஒதுக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு எண்ணை நிர்ணயிப்பதைத்தான் குறியீட்டு முறை (Encoding) என்கிறார்கள். எந்தமொழியிலும் எந்த விடயத்தையும்




கணனியில் சேமிக்க இதுவே அடிப்படை. சேமித்த விடயத்தை அச்சிட்டு உபயோகப்படுத்த எழுத்து வடிவம் வேண்டும். அதை Font என்கிறார்கள். கணனியில் விடயத்தை உட்செலுத்த கீபோர்ட் எனப்படும் விசைப் பலகையும் தேவை.

ஒரு மொழி, கணனியிலும் அதன் வழியாக இணையத்திலும் தங்குதடையின்றி முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வழி வகுப்பவை இவை. துரதிர்ஷ்டவசமாக இதில் தமிழில் ஏகப்பட்ட சிக்கல்கள்.

தட்டச்சு மற்றும் ஒலியியல் (ƒபொனடிக்) முறை அடிப்படையிலான விசைப்பலகைகளும் கணனித் தமிழர்களிடையே உபயோகத்தில் உள்ளன. அதுபோல வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு விதமான எழுத்து வடிவங்களைக் கையாளும் போக்கும் இருக்கிறது.

இவற்றுடன் குறியீட்டு முறையிலும் மாறுபட்ட நிலைப்பாடுகளைக்கொண்ட குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்தத் தடைகளையெல்லாம் கடந்தால்தான் ஆங்கிலத்துக்கு நிகராகத் தமிழும் இணையத்தில் பீடு நடைபோடமுடியும்.

யுனிகோட் குறியீட்டு முறை தற்போது 16 பிட் அடிப்படையிலானது. ஆங்கில மொழிக்குரிய அஸ்கி (ASCII- American Standard Code For Information Interchange) குறியீட்டு முறை 8 பிட்டுகள் அடிப்படையிலானது. 8 பிட் என்பதை 1,2,4, 8,16,32,64, 128 என்ற விகிதத்தில் குறியீட்டுப் பரப்பு விரிவடைவதைக் குறிக்கும்.16 பிட் என்பது 256, 512 என்ற விகிதத்தில் செல்லும். இந்த 16 பிட் அடிப்படையிலான குறியீட்டுப்பரப்பில் உலக மொழிகளுக்கு மொத்தம் 65,000 இடங்கள்வரை ஒதுக்கியிருக்கிறது யுனிகோட்.

தற்போதுள்ள யுனிகோட் ஒதுக்கீட்டில் தமிழுக்கு அளிக்கப்பட்ட இடங்கள் 128.இதிலும் 67 இடங்கள் காலியாக உள்ளன. தொலை நோக்குக் கண்ணோட்டத்துடன் பார்த்தால் தமிழுக்கு இது பெரும்தடையாக இருக்கும் எப்படி?

உதாரணத்துக்கு தினமணி என்பது எழுத்து வடிவப் பதிவுப்படி 4 குறியீடுகளைக் கொண்டது. இதுவே இப்போதுள்ள யுனிகோட் 8 பிட் குறியீட்டு முறைப்படி பார்த்தால் த்+இ+ன்+அ+ம்+அ+ண்+இ என 8 குறியீடுகளாகப் பதிவாகும்.

அதாவது நமது கண்ணுக்குத் தினமணி என்பது நான்கு எழுத்தாகத் தெரிந்தாலும் கணனி அதைக் கொண்டுவர 8 குறியீடுகள் தேவை. இது தமிழில் தகவல்களைப் பதிவு செய்வதிலும் சேமிப்பதிலும் தாமதத்தை ஏற்படுத்தும். மேலும் சேமிப்பதற்கான இடமும் அதிகம் தேவைப்படும். அகர வரிசைப்படுத்துதல் மற்றும் தேடுதலின்போது ஆங்கிலம் போல எளிதாக அன்றி கூடுதல் நேரம் தேவைப்படும். இணையம் என்றாலே கண்ணிமைக்கும் வேகத்தில் தகவல்கள் குவிய வேண்டும். ஆனால் தமிழின் இப்போதைய குறியீட்டு முறை அத்தகைய வேகத்தை உறுதி செய்வதாக இல்லை.

சீனா, கொரியா மற்றும் ஜப்பான் எழுத்துகள் சித்திர எழுத்துகள் எண்ணிக்கையில் தமிழைவிட பல மடங்கு அதிகமானவை. கொரிய மொழிக்கு மட்டும் 12, 177 இடங்களை யுனிகோட் ஒதுக்கியிருக்கிறது. சீன, கொரிய மற்றும் ஜப்பான் மொழி களுக்குச் சேர்த்து சுமார் 25,000 இடங்கள் வரை ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படு கிறது.

தமிழுக்காக யுனிகோட் அமைப்பில் இந்திய அரசு சார்பாக தமிழ்நாட்டவர்களே உறுப்பினராக உள்ளனர். தமிழுக்குத் தேவையான கூடுதல் இடங்களின் முக்கியத்துவத்தைப் புரியவைத்து கணனித்தமிழ் அறிஞர்களிடையேயும் ஒன்றுபட்ட கருத்தை உருவாக்கி யுனிகோட் அமைப்பிடம் நமக்குரிய இடத்தைப் பெறுவதில் தமிழ்நாடுதான் முழுவீச்சில் இறங்கவேண்டும்.

**யுனிகோட் இணையத்தள முகவரி–**
**www.unicode.org**

**தமிழ் யுனிகோட் கருவிகள், எழுத்துக் கருவிகள் போன்றவற்றின் தொகுப்பு**

**ஏ-கலப்பை 2.0**
**(e-Kalappai 2.0)**

இக்கருவி மூலம் அஞ்சல் விசைப் பலகை கொண்டு Unicode, TSCII குறியீட்டில் தமிழை விண்டோஸ் இயங்குதள செயலிகளில் தட்டச்சு செய்ய முடியும்.

**முரசு அஞ்சல்**

தமிழை உள்ளீடு செய்யும் ஒரு கருவி TSCII மற்றும் யுனிகோட் எழுத்துக்களை இதன் உதவியுடன் உள்ளீடு செய்ய முடியும். அதனுடன் எழுத்துரு மாற்றி மற்றும் மின்னஞ்சல் போன்ற பல செயற்பாடுகளை இது செய்கின்றது.

**குறள் தமிழ்ச்செயலி**

மைக்ரோசொப்ட் விண்டோஸ் தொகுப்பில் இயங்கும் அனைத்து சொப்ட்வெயர்களிலும் தமிழை உள்ளீடு செய்ய பயன்படுகிறது.

இதன் சிறப்பம்சங்கள் தமிழில் UNICODE, TSC, TAB, TAM, LIPI போன்ற எழுத்து வகைகளை இதன்மூலம் பயன்படுத்தலாம். தமிழில் அனைவரும் விரும்பும் ஆங்கில ஒலியியல் சார்ந்த விசைப் பலகையும் தமிழ் 99 என்ற தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்ட விசைப்பலகையும் புதிய மற்றும் பழைய தமிழ் தட்டச்சு சார்ந்த விசைப் பலகைகளையும் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**புதுவை தமிழ் எழுதி**

Bamini. Tscii. Tab-tam Unicode எழுத்துருக்களில் தமிழை தட்டிக் கொள்ளக் கூடிய ஒரு இலவச கருவி இச்செயலியை நீங்கள் இறக்கி பொருத்திக்கொள்ள வேண்டியது என்ற அவசியம் இல்லை.

ஏனெனில் இது வலைப்பக்கத்துடன் ஒன்றிணைந்த ஒரு செயலியாகும். இந்த வலப்பக்கத்தை மட்டும் உங்கள் வன்தட்டில் சேமித்து வைத்து தேவைப்பட்ட நேரத்திலும் இணையத்துடன் தொடுப்பு இல்லாத நிலையிலும் (off line) நீங்கள் உபயோகிக்கலாம்.

**தமிழ் யுனிகோட் எழுதி**

யுனிகோட் தகுதரத்தில் தமிழை தட்டிக் கொள்ளக்கூடிய ஒரு கருவி

**புதுவை தமிழ்**
**யுனிகோட் எழுத்துரு மாற்றி**

நீங்கள் ஏற்கனவே Bamini, Tscii, Tab-tam, Romanise எழுத்துக்களில் தட்டிய ஆக்கங்களை யுனிகோட் தரத்திற்கு மாற்றும் ஒரு இலவச கருவி . இச்செயலியை நீங்கள் இறக்கி பொருத்திக்கொள்ள வேண்டியது என்ற அவசியம் இல்லை. ஏனெனில் இது வலைப்பக்கத்துடன் ஒன்றிணைந்த ஒரு செயலியாகும். இந்த வலைப் பக்கத்தை மட்டும் உங்கள் வன்தட்டில் சேமித்து வைத்து தேவைப்பட்ட நேரத்திலும் இணையத்துடன் தொடுப்பு இல்லாத நிலையிலும் (off line) நீங்கள் உபயோகிக்கலாம்.

**சர்மாஸ் சொலூசன் மென்பொருள்**

தமிழில் சொற்பிழைச்சுட்டி மென்பொருள். அடிப்படை தமிழ் இலக்கணப் பிழைச் சுட்டி, யுனிகோட் மாற்றம் மற்றும் யுனி கோட் முறையை ஆதரிக்கும் இந்திய மொழி களில் உள்ள தகவல் கோப்பை மற்ற மொழி எழுத்துருக்களுக்கு மாற்றித்தரும் வகையில் உருவாக்கப்பட்ட Transliteration or Script Conversion

**ஆர். பிரபுதாசன்**
**IIT, கொழும்பு**

**அழகி தமிழ் மென்பொருள்**

தனித்துவம் வாய்ந்த ஒரு பன்முகப் பயன்பாட்டு மென்பொருள். விண்டோசின் அனைத்து செயலிகளிலும் நேரடியாகவே தட்டச்சு செய்ய வல்லது. யுனிகோட் TSCII இரண்டிலும் - ஒலியியல் தமிழ் நெட்99, தமிழ் தட்டச்சு என்ற மூன்று விசைப்பலகை முறைகளிலும் திஸ்கியிலிருந்து யுனிகோட்டிற்கு மாற்று bulk Unicode converter (ஒரே நேரத்தில் பல நூறு திஸ்கி கோப்புக்களை மாற்றும்) வசதி கொண்டது.

தமிழ் யுனிகோட் எழுத்துருக்கள்
லதா(மைக்ரோசொப்ட்)
தமிழ் யுனிகோட் இளங்கோ பாரதி
யுனிகோட் இணைமதி
தேனீயுனிகோட்
தமிழ் யுனிகோட் ஆவரங்கால்
சென்னை நெட்வேர்க்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 61

**யுனிகோட் 3.2 பரிமாணத்தின் மொத்த எழுத்துருக்களின் எண்ணிக்கை யாது?**

**விடைகளை 28.03.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

சி. கேதீஸ்வரன்
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.


**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 60 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

விதுசாலினி அரியநாயகம்
தரம் 12 (உயிரியல் பிரிவு)
கிளி/ பளை மத்திய கல்லூரி,
பளை

### புதிர் 60 இற்கான கேள்வியும் விடையும்:

**கேள்வி:-** படத்தில் காட்டிய சுற்றில் உள்ள வயரை இரு மடங்காக நீட்சியுறச் செய்தால் சுற்றின் மின்னோட்டத்தின் மாற்றம் என்ன?



**விடை:-** சுற்றின் மின்னோட்டம் நான்கு மடங்கால் குறையும்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 61

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 71

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

கூர்ஸ்க் பிரதேசத்தில் சோவியத் டாங்கி வீரர்கள்



1943 கோடையில் செஞ்சேனை, சோவியத்-ஜேர்மனிய போர்முனையில் இயங்கி வந்த ஹிட்லர் துருப்புகளை டாங்கிகளில் 1.8 மடங்கும் பீரங்கிகளில் கிட்டத்தட்ட இருமடங்கும் விமானங்களில் 2.8 மடங்கும் விஞ்சி நின்றது. இது பெரும் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடக்க சோவியத் படைத் தலைமைக்கு வாய்ப்பளித்தது. ஆனால், கூர்ஸ்க் அருகே ஜேர்மனி தாக்குதலுக்குத் தயாராகி வருவதைப் பற்றி விவரங்கள் கிடைத்ததால் உயர் மட்டப்பிரதான படைத்தலைமை யகம் முதலில் தாக்குவதில்லை என்றும் கூர்ஸ்க் முகப்பு பிரதேசத்தில் ஆழமான, பல படைவரிசை களையுடைய தற்காப்பை ஏற்படுத்தி தற்காப்புப் போரில் எதிரியை அலைக் கழித்து, பலமிழக்கச் செய்வது என்றும் பின்னர் எதிர் தாக்குதலில் இறக்கி எதிரியின் துருப்புகளை முறியடிப்பது என்றும் முடிவுசெய்தது. இவ்வாறாக பொதுத்தாக்குதலுக்கு அதிக பட்சம் அனுகூலமான சூழ்நிலைகளை செஞ்சேனைக்கு ஏற்படுத்துவதற்காக அந்த நிலைமைகளில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் முக்கிய தாக்குதல் சக்திகளை முறியடிப்பதற்கான மிகவிவேகமான முறையை சோவியத் படைத் தலைமை தேர்ந்தெடுத்தது. பின்னால் நடந்த சம்பவங்களின் போக்கு இம்முடிவு சரியானது என்பதை மெய்ப்பித்தது.


பிரதான படைத் தலைமையகம் ஜேர்மனியத் தாக்குதலை மத்திய மற்றும் வரோனிஷ் சேனைகளின் தீவிர தற்காப்பைக் கொண்டு சந்திக்க திட்டமிடப்பட்டிருந்தது. இச் சேனையின் பின்னணியில் பலம் வாய்ந்த போர்த்தந்திர சேமப்படையாக ஸ்டெப்பி சேனை என்ற இன்னொரு சேனை இருந்தது. பாசிச ஜேர்மனிய முக்கியத் தாக்குதல் படைத் திரட்டுகள் பலமிழக்கச் செய்யப்பட்ட பின் ஐந்து சேனைகளின் (மேற்கு சேனையின் இடப்பிரிவு, பிரியான்ஸ்க், மத்திய வரேனிஷ் மற்றும் ஸ்டெப்பி சேனைகள்) சக்திகளைக் கொண்டு எதிர்த் தாக்குதல் தொடுத்து, எதிரியை முறியடிக்கத் திட்டமிடப்பட்டது. மேற்கொண்டு கிழக்குக் கரையோர உக்ரேன், தன்பாஸ் மற்றும் கிழக்கு பைலோருஸ்யா, குபான் ஆகிய இடங்களில் தாக்குதலைத் தொடரும் எண்ணம் இருந்தது.

ஏப்ரல் முதல் ஜூன்வரை கூர்ஸ்க் முகப்பில் சோவியத் துருப்புகள் பொறியியல் ரீதியாக பலமிக்க தற்காப்பிற்கு ஏற்பாடு செய்தன. இதில் மொத்தம் 250-300கி.மீ. அழமுடைய 8 தற்காப்பு எல்லைகள் அடங்கியிருந்தன. மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் சோவியத் துருப்புகள் இன்னமும் இது போன்ற சிறந்த தற்காப்பை அமைத்ததில்லை. மத்திய சேனையின் மண்ட லத்தில் மட்டும் துருப்புகள் மற்றும் மக்களின் உதவியோடு 5 ஆயிரம் கி.மீ. வரையிலான மறைகுழிகளும் தொடர்பு வழிகளும் தோண்டப்பட்டன. இது மாஸ்கோவிலிருந்து இர்த்கூத்ஸ்க் நகர் வரையில் உள்ள தூரத்துக்குச் சமமானது. இந்தத் தற்காப்பு முக்கியம்ான டாங்கி எதிர்ப்பு தற்காப்பாக இருந் தது. டாங்கி எதிர்ப்பு ஆதாரமையங் களும் டாங்கி எதிர்ப்பு மண்டலங்களும் இதன் அடிப்படையாக விளங் கின. டாங்கி எதிர்ப்புப் பிரதேசங்கள் நேரடி நடைமுறை மண்டலத்தின் உட்பகுதி முழுவதும் முக்கிய திசை களில் படைகளின் தற்காப்பின் உட்பகுதி முழுவதும் இருந்தன. டாங்கி எதிர்ப்பு ஆதாரமையங்களில் பீரங்கிகள், மார்டர் பீரங்கிகள், டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் முதலியவை இருந்தன. கண்ணிவெடித் தடைகள் பரவலாகப் பயன்படுத்தப் பட்டன.

கூர்ஸ்க், அரியோல், வரோனிஷ், ஹார்க்கவ் மாகாணங்களைச் சேர்ந்த உழைப்பாளிகள் தற்காப்பு எல்லைகளைக் கட்டுவதில் பெரும் பங்காற்றினர். இவர்கள், நூறாயிரக்கணக்கான ஆட்களைத்தற்காப்புப் பணிகளுக்கு அனுப்பினர். உதாரணமாக ஜூன் மாதம் மட்டும் கூர்ஸ்க் மாகாணத்தைச் சேர்ந்த 3 இலட்சம் பேர்கள் தற்காப்புப் பணிகளில் பங்கேற்றனர். அதேநேரத்தில் வசந்த காலத்திலேயே *குபானில்* தொடங்கிய வான் ஆதிக்கத்திற்கான போராட்டம் தீவிரமாக நடந்தது.

எதிரியுடனான சமருக்காக ஆயத்தமானபோது துருப்புகள் மத்தியில் பெரும் தயாரிப்புப்பணி நடத்தப் பட்டது. துருப்புகளின் போர்ப் பயிற்சியை அதிகப்படுத்துதல், எதிரியின் புதிய ஆயுதங்களைப் பயின்று இவற்றிற்கு எதிராகப் போரிடும் முறைகளைக்கற்பது ஆகியவை இதில் அடங்கியிருந்தது. எல்லா யூனிட்டுகளிலும் படைப்பிரிவுகளிலும் யுத்த எழுச்சி நிலவியது.

சக்திகளின் சமன் நிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாக இருந்தது. வரோனிஷ் மற்றும் மத்திய சேனைகளில் 13 இலட்சம் பேர்கள் இருந்தனர். 19100 வரை சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 3444 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 2170 விமானங்களும் இருந்தன.




டாங்கிகளை நகரவிடாமல் தடுப்பதற்காக வெட்டப்பட்டிருந்த பெரும் குழிக்குள் இழுக்கப்பட்டுவிட்ட சோவியத் டாங்கி அணியின் டாங்கி ஒன்று, நிலத்திற்கடியில்டியில் புதைந்து இயங்கமுடியாத நிலையில்

நிறைவேற்றப்பட்ட கடமைகளின் தன்மை, இராணுவ நடவடிக்கைகளின் போக்கிற்கேற்ப கூர்ஸ்க் சமரை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் மத்திய மற்றும் *வரோனிஷ்* சேனைகளின் துருப்புகள் போர்த்தந்திர தற்காப்பு நடவடிக்கையை நிறைவேற்றின. இரண்டாவது கட்டத்தில் *அரியோல்* தாக்குதல் நடவடிக்கையின் மேற்கு சேனையின் இடது பிரிவு, *பிரியான்ஸ்க்* மற்றும் மத்திய சேனைகளும் *பேல்கரத்- ஹார்க்கவ்* நடவடிக்கையின் தென்மேற்கு சேனையோடு ஒன்றிணைந்து *வரோனிஷ்* மற்றும் *ஸ்டெப்பி* சேனைகளும் எதிர்த் தாக்குதல் தொடுத்தன.

ஜூலை 2 ஆம் திகதி சோவியத் உயர்மட்டபிரதான படைத் தலைமை வேவு விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஜூலை 3-6 திகதிகளில் பாசிச ஜேர்மனியப் படைத் திரட்டுகள், தாக்குதலுக்கு மாறக்கூடும் என மத்திய மற்றும் வரோனிஷ் சேனையின் தளபதிகளை எச்சரித்து, துருப்புகளை முழு இராணுவத்தயார் நிலையில் வைத்திருக்குமாறு கோரியது. ஜூலை 5 ஆம் திகதி காலையில் தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சிறைப்பிடிக்கப்பட்ட போர்க் கைதிகள் தெரிவித்தனர். இவையெல்லாம் எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுக்கள் குவிக்கப்பட்டிருந்த இடங்களை நோக்கிய பீரங்கித்தாக்குதல்களை தயார்ப் படுத்துவதற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. பீரங்கிப்படையின் பூர்வாங்க எதிர்த்தாக்குதல்களின் விளைவாய் எதிரிக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டன. எதிரியின் தாக்குதல் 2 மணி நேரம் ஒதுக்கிவைக்கப் பட்டன.

கூர்ஸ்க் பிரதேசத்தில் சோவியத் டாங்கி வீரர்கள்



(தொடரும்)

# ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரசாரத்தில் களத்தில் குதிக்கிறது பிரித்தானிய தமிழர் பேரவை

(கொழும்பு)

**பிரித்தானிய தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்றை வலியுறுத்தியும் இதன் ஒருபடியாக இலங்கை மீதான அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்க வலியுறுத்தியும் பிரித்தானியாவின் தமிழர்களுக்கான சர்வகட்சி பாராளுமன்ற குழு தொடர்ச்சியான இராஜதந்திர சந்திப்புக்களை ஜெனீவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் மேற்கொண்டு வருகின்றது.**

தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் மான், சிவோன் மாக் டொனா மற்றும் சுதந்திர ஜனநாயகக் கட்சியை சேர்ந்த டோம் பிரேக் ஆகியோர் பிரித்தானிய தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பில் இந்த சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பல இராஜதந்திரிகளை இவர்கள் சந்தித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை பழைமைவாத கட்சியை சேர்ந்தவரும் பிரித்தானியாவின் தமிழர்களுக்கான சர்வகட்சி பாராளுமன்ற குழுவின் தலைவருமான லீ ஸ்காட் பாராளுமன்ற உறுப்பினர் இவர்களுடன் இணைந்துள்ளார்.

மேலும் ஜெனீவா கூட்டத்தொடர் முடிவதற்கு முன்னர் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுதொடர்பில் ஜெனீவா செல்ல ஏற்பாடாகியிருக்கிறது.

இலங்கை மீதான அமெரிக்காவின் இந்த தீர்மானமானது தமிழ் மக்கள் வலியுறுத்தி வரும் நீதி தொடர்பிலோ அன்றி அவர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பிலோ காத்திரமான எந்தவொரு அம்சத்தையும் கொண்டிருக்கவில்லை என்ற போதிலும் இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில சிபாரிசுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் மீது சில கடப்பாடுகளை வலியுறுத்தி சர்வதேச சமூகத்தினால் முதன் முதலாக கொண்டு வரப்படும் ஒரு தீர்மானமாக இது அமைவதால் எதிர்காலத்தில் அதனூடாக சில இராஜதந்திர ரீதியான சாதகமான பலாபலன்களை தமது இறுதி இலக்கை அடைவதற்கு தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதை கருத்தில் கொண்டே இந்த தீர்மானத்திற்கு ஆதரவான செயற்பாடுகளை தந்திரோபாய ரீதியிலும் மிகக் கவனமான முறையிலும் பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)

## வெளிநாட்டு பணத்துடன் மூன்று பேர் கைதாகினர்

ஒருகோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

அத்துடன் சந்தேக நபர்களிடம் இருந்து ஒருதொகை பயணிகள் காசோலையையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்கள் மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆகும். இக் கைதான மூன்று சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (அ-7)

## யுத்தத்தால் பாதிப்படைந்த விதவைகளுக்கு கடன் உதவி

(புதுக்குடியிருப்பு)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் ஆட்களையும் ஆதனங்களையும் கைத் தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் யுத்தத்தால் பாதிப்படைந்த விதவைகளுக்கு சுயதொழில் கடன் உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன்படி தேவபுரம் கிராம அலுவலர் பிரிவிலிருந்து 20 பயனாளிகளும் வள்ளிபுனம் கிராம அலுவலர் பிரிவில் 10, கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில் 5, மன்னார் கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 4, சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் 17, உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 14, உடையார்கட்டு வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 13, தேராவில் கிராம அலுவலர் பிரிவில் 3, விஸ்வமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 4, வள்ளுவர்புரம் கிராம அலுவலர் பிரிவில் 4,மாணிக்கபுரம் கிராம அலுவலர் பிரிவில் 3 பயனாளிகளும் என மொத்தமாக 100 பயனாளிகளுக்கு கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து புனர்வாழ்வு அதிகார சபை உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன.

இறுதிப் போர்க் காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகமான பெண்கள் தமது கணவனை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஜெனீவா பிரச்சினையின் போதும் வெள்ளைவான் கடத்தலில் அரசு

### விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்படவுள்ள நிலையில் வெள்ளைவான்களில் மக்கள் கடத்தப்படுகின்றனர் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை மட்டுமன்றி ஆளும் கட்சி உறுப்பினர்களையும் வெள்ளைவான் துரத்துவதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொலன்னா நகர சபைத் தலைவரை கடத்த முற்பட்ட இராணுவப் படையினரை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஆனால், அதிகாலை உயர் பொலிஸ் அதிகாரிகள் திடீரென குறித்த படைவீரர்களை விடுதலை செய்துள்ளனர்.

எவ்வித பதிவுகளும் இன்றி சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்ய வெள்ளைவான்கள் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

இராணுவ வாகனங்களில் இராணுவ பொலிஸாரே தப்பியோடியவர்களை கைது செய்வது வழமையானது. இது ஓர் பாரிய குற்றச் செயலாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் தருணத்தில் இவ்வாறு முட்டாள்தனமான காரியங்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றமை வருந்தத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## ரங்கே எம்.பியை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறார் அமைச்சர் நிசாந்த பெரேரா

(கொழும்பு)

அரசாங்கம் மீனவர்களுக்காக செய்துள்ள சேவைகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய் மானியம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து தன்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவுக்கு பகிரங்க அழைப்பு விடுப்பதாக வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நேற்று முன்தினம் தனியார் ஊடகம் ஒன்றிற்கு வழங்கியுள்ள அறிக்கை ஒன்று தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடமேல் மாகாண அமைச்சர் சனத் நிசாந்த மேலும் தெரிவித்துள்ளதாவது,

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தனியார் வானொலி ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போது அரசாங்கம் தற்போது மீனவர்களுக்கு எதுவித மானியங்களையும் வழங்கவில்லை எனவும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய் மானியம் கூப்பன் அட்டைகளுடன் மாத்திரம் நின்று விட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே தான் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவை விவாதத்திற்கு அழைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)





யா/ பருத்தித்துறை புலோலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வருவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.




# சிறுவர் அரங்கம்

41

அம்புலி மாமா கதைகள்

## ராமுவின் ஆசை

லட்சுமிபுரம் என்ற குக்கிராமத்தில் வசித்து வந்த ராமு மிகவும் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தான். தினசரி கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து காலம் கழிப்பது மிகவும் கடினமாக இருந்தது.



அவனுடைய மனைவி அவனிடம் பட்டணத்திற்குச் செல்லுமாறு பலமுறை கூறியும் அவனுக்கு அதில் விருப்பமில்லை.

ஓரிரவு உறக்கத்தில் வடை சாப்பிடுவது போல் கனவு கண்ட ராமு, மறுநாள் அதைப் பற்றித் தன் மனைவியிடம் சொன்னான். அதற்கு அவள், “குடிப்பதற்கு கஞ்சிக்குக்கூட வக்கில்லை. இதில் வடை சாப்பிடும் ஆசை தேவைதானா?” என்று இளக்காரமாக கேட்டாள்.

தொடர்ந்து, “எத்தனை நாட்களாக உன்னைப் பட்டணம் சென்று சம்பாதிக்கச் சொல்லிக்கொண்டு இருக்கின்றேன்! கேட்கிறாயா? இங்கு இவ்வாறு உட்கார்ந்து இருந்தால், நாம் வாழ்நாளெல்லாம் வேதனைப்பட வேண்டியதுதான்!” என்று மிகவும் அலுத்துக் கொண்டாள்.

பிறந்ததிலிருந்து தன் கிராமத்தை விட்டு வெளியே சென்றறியாத ராமுவிற்கு முன் பின் தெரியாத பட்டணம் செல்வது இனமறியாத பயத்தை உண்டாக்கியது.

“சரிசரி! வா, வந்து கஞ்சியை குடித்து விட்டுப் போ!” என்று அவன் மனைவி அழைக்க, அவன் கஞ்சிக் கலயத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அப்போது பக்கத்து வீட்டுக் குழந்தை தள்ளாடித் தள்ளாடி அவர்களுடைய வீட்டிற்குள் மெல்ல நுழைந்தது. அவ்வாறு அது நடந்து வரும் போது, அதனுடைய கால் பட்டு இடறி, கஞ்சிக் கலயம் கவிழ்ந்து.

கஞ்சி தரையில் கொட்டியது. அன்று முழுப்பட்டினியுடன் ராமு கூலி வேலை தேடிச் சென்றான். கிராமத்து கணக்குப் பிள்ளை வீட்டை அடைந்து ஏதாவது வேலை இருக்கிறதா? என்று கேட்டான்.

அப்போது அவர் வீட்டிலிருந்து வடை சுடும் வாசனை வீசியது. “இன்று எங்கள் வீட்டில் என் தந்தைக்கு சிரார்த்தம் நடக்கிறது.


நீ கிணற்றில் இருந்து நீர் இறைத்து தொட்டியை நிரப்பு!” என்று வேலை கொடுத்தார்.

ராமு மிக உற்சாகமாக வேலையில் இறங்கினான். வேலை செய்து முடித்தவுடன், கணக்குப்பிள்ளையின் மனைவி அவனுக்கு கூலி கொடுத்தாள்.

ஆனால் கூலியுடன் வடையையும் எதிர்பார்த்த ராமு வெட்கத்தை விட்டு, “அம்மா! எனக்கு இரண்டு வடை கொடுங்களேன்” என்று கெஞ்சினான். “வடையா? எனக்கே வடை கிடைக்கவில்லை! போய்வா!” என்று அவள் அனுப்பி விட்டாள். ஏமாற்றத்துடன் ராமு செட்டியார் கடையை நோக்கி நடந்தான்.


அவனைக் கண்டதும் செட்டியார் உற்சாகத்துடன், “வா ராமு! எங்கள் வீட்டில் வடை சுடப் போகிறார்கள்! இருந்து, சாப்பிட்டு விட்டுப்போ! அதுவரையில், அரிசி மூட்டைகளை எடுத்து வை!” என்றார்.

உடனே ராமு உற்சாகத்துடன் வேலைசெய்ய ஆரம்பித்தான். அப்போது, செட்டியார் வீட்டுப் பையன் ஓடி வந்து, வடை சுடும் போது அம்மாவின் கையில் கொதிக்கும் எண்ணெய் கொட்டி விட்டது!” என்று கூற செட்டியார் கடையை மூடி விட்டு விரைந்து சென்று விட்டார்.



போகுமுன், அவனுக்கு கூலியாக சிறிது அரிசிக் குருணை தந்து விட்டுச் சென்றார்.

தன் அதிஷ்டத்தை நொந்து கொண்டே, ராமு வீட்டை அடைந்தான். அவன் மனைவி அவனை அன்புடன் அழைத்து, “இதோபார்! நீ கண்ட கனவு பலிக்கப் போகிறது! இந்தா, வடை சாப்பிடு!” என்று ஆறு வடைகளை அவன் முன் வைத்தாள். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த ராமு “ஆகா! பிரமாதம்! வடை யார் கொடுத்தார்கள்?” என்று கேட்டான்.



“பக்கத்துவீட்டுக் குழந்தைக்கு இன்று ஆண்டு நிறைவு கொண்டாடினார்கள். அவர்கள் நமக்கும் கொடுத்து இருக்கிறார்கள்!” என்றாள்.

மகிழ்ச்சியுடன் வடையை சாப்பிட முனைந்தவன் ஏதோ நினைவிற்கு வந்தவனாக, “நீயும், குழந்தைகளும் சாப்பிட்டீர்களா?” என்று கேட்க, “உனக்கு வடை என்றால் ஆசை என்பதால் நாங்கள் யாரும் சாப்பிடவில்லை. எல்லாம் உனக்குத்தான்!” என்றாள் அவன் மனைவி. அதைக் கேட்ட ராமு நெகிழ்ந்து போய், “நீங்கள் சாப்பிடவில்லை என்றால் எனக்கும் வேண்டாம்! சாப்பிடுவதானால் எல்லோரும் பகிர்ந்து கொள்வோம்!” என்றான்.

அப்போது, பக்கத்து வீட்டுக் குழந்தை மீண்டும் தளர் நடை போட்டு அவர்கள் வீட்டிற்குள் நுளைந்தது. குழந்தையை அன்புடன் அணைத்துக் கொண்டான் ராமு. திடீரென அவனுக்குள் ஒரு சிந்தனை உதித்தது.

“இந்தப்பச்சிளம் குழந்தை பயின்றவுடன் வீட்டில் கால் தரிக்காமல் வெளியேறி நம் வீட்டிற்குள் அடிக்கடி நுழைகிறது. ஆனால், நான் பட்டிக் காட்டை விட்டு வேலை தேடிப் பட்டணம் செல்ல பயப்படுகிறேன். என் குழந்தைகள் நன்கு வயிராற சாப்பிட வேண்டுமானால், இங்கேயே முடங்கிக்கிடந்தால் நடக்காது’ என்று எண்ணிய ராமு, தன் மனைவியை நோக்கி “நான் பட்டணம் சென்று வேலை செய்யத் தீர்மானித்து விட்டேன். நன்கு சம்பாதித்து, உங்களுக்குப் பசி தீர உணவளிப்பேன்!” என்றான் ராமு. இதைக் கேட்ட அவனது மனைவி மிகவும் மகிழ்ச்சியுடன் கடவுளுக்கு நன்றி கூறினாள்.

# வன்னிப்பகுதியில் துரிதமாக இடம்பெறும் நெற்கொள்வனவு

(மல்லாவி)

வன்னி மாவட்ட விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கையாக நெல் கொள்வனவு செய்வதற்கு கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு நெல் சந்தைப் படுத்தல் சபையின் ஊடாக கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது.



கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம், முழங்காவில் பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம், வெள்ளமுள்ளி வாய்க்கால் ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பகுதியிலும் நெற்கொள்வனவு மையங்கள் திறக்கப்பட்டு கொள்வனவுகள் நடைபெறுவதாக மாங்குளம் உதவிக்கொள்வனவு சந்தைப் படுத்தல் முகாமையாளர் ஆர்.எம்.எம்.ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2011 ஆம் ஆண்டு மற்றும் இவ்வருடத்திற்கான நெல் கொள்வனவுக்காக எமது அமைச்சின் பிரிவினால் பெரும்போக நெற்கொள்வனவுக்காக ஒரு விவசாயியிடம் இருந்து 3 ஆயிரம் கிலோ நெல்லை (சிவப்புநாடு, வெள்ளைநாடு) ஒரு கிலோவை 28 ரூபாவிற்கும் சம்பா நெல்லை ஒரு கிலோ 30 ரூபாவிற்கும் கொள்வனவு செய்கின்றோம்.

விவசாயிகள், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களினால் அல்லது அந்தப் பகுதி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப் படுகின்ற விண்ணப்பப்படிவத்தை பெற்று பூர்த்தி செய்து நெல் கொள்வனவு மையங்களுக்கு நெல் விநியோகத்தின் போது ஒப்படைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவம் இல்லாதவிடத்து நெல் கொள்வனவு செய்யப்படமாட்டாது. நெல்கொள்வனவு பைகள் இலவசமாக வழங்கப்படும்.

மாங்குளத்தில் உள்ள நெல்கொள்வனவு மையத்திற்கு துணுக்காய், பாண்டியன் குளம், ஒட்டுசுட்டான், ஒலுமடு, நெடுங்கேணி, கனகராயன்குளம் பகுதிகளை உள்ளடக்கிய கமநல சேவை பிரிவில் உள்ள விவசாயிகள் நெல்லை வழங்க முடியும்.

நெல் கொள்வனவிற்கு தர நிர்ணயம் இருத்தல் அவசியம்.

தரநிர்ணயமானது உச்ச ஈரப்பதன் 14 வீதமாகவும் உச்சக்கழிவு ஒரு வீதமாகவும் (எடையில்) ஏனையவற்றின் உச்சக்கலவை 6 வீதமாகவும் (தொகையில்) உச்ச பதர் நெல் அளவு 9 வீதம் (கொள்வனவின் அடிப்படையில்) இருப்பதோடு நிறம்மாறிய (மழி) நெல் மணிகள் பூச்சி புழுக்களின் முட்டை மற்றும் பூச்சிகள், கல், மண் அற்றதாக இருத்தல் வேண்டும். பங்கசு நோய்களுக்கு அகப்பட்ட மங்கல் நிறமுடைய நெல் மணிகள் இல்லாதவையாகவும் இருத்தல் வேண்டும்.

விற்கப்படும் நெல்லுக்குரிய பணம் நெல் கொள்வனவு செய்த அடுத்த நாள் அண்மையில் உள்ள இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி ஊடாக வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

## இ.போ.ச. ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கக்கோரிக்கை

சம்பளங்களை உடனடியாக வழங்குவதாகவும் வேறு கோரிக்கைகளை வழங்குவதாகவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளபோதும் இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் தமது வேலை நிறுத்தத்தை இன்றும் தொடர்ந்தனர்.

அவிசாவளை, அம்பாந்தோட்டை, கம்பஹா, நீர்கொழும்பு, கண்டி, கேகாலை உட்பட பல இடங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமையும் நேற்று முன்தினமும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.


சம்பள உயர்வு, ஊழியர் சேமலாப நிதி நன்மைகள், பணிக்கொடை என்பவற்றை வழங்கக் கோரி இவர்கள் இந்த வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதி வழங்கப்பட வேண்டிய சம்பளம் உரிய காலத்தில் தமக்குக் கிடைப்பதில்லை எனவும் இம்மாத சம்பளம் இதுவரையில் வழங்கப்படவில்லை என்றும் அகில இலங்கைப் போக்குவரத்து ஊழியர் சங்கம் கூறியது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் சஷி வெல்கம, சம்பளம் வழங்குவதற்கான ஒழுங்குகளைப் போக்குவரத்து அமைச்சும் நிதியமைச்சும் மேற்கொண்டதாகக் கூறினார். (அ-2)

## வெள்ளைவான் கடத்தலை நிறுத்திய அரசு பளுப்புநிறவான் கடத்தலை தொடர்கிறது

### ரணில் கிண்டல்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் ஒரு பரிந்துரையை மட்டுமே அரசாங்கம் இதுவரையில் அமுல்படுத்தியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெள்ளைவான் கடத்தல்களை நிறுத்துமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்தப் பரிந்துரையை அமுல்படுத்தியுள்ளது.

வெள்ளை வான்களில் கடத்துவதனை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. மாறாக அண்மையில் பளுப்பு நிற வான் ஒன்றில் தெமட்டகொட பிரியந்த என்பவர் கடத்தப்பட்டுள்ளார்.

பரிந்துரைகளை இவ்வாறு அமுல்படுத்துவதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவேண்டும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### சிலுவையின் மகிமை



அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி

யூத மக்களுடைய வரலாற்றில் அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை, மரண தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு வழிகோலிய சிலுவை, இறைமகனின் மரணத்திற்கு கருவியாக அமைந்த சிலுவை எவ்வாறு கிறிஸ்தவர்களின் வாழ்வில் புனிதச் சின்னமாக மாறியது? சிலுவையில் இறந்த இறைமகன் இயேசு உயிர்த்தெழுந்ததினால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறியது. சிலுவைப் பயணத்தின் வழியாக இயேசு இறைமகன் என்ற உண்மை நிரூபிக்கப்படுகின்றது.

சிலுவை என்பது இணைபிரியா நண்பன், கடவுளின் ஊழியன். நடக்கும் பாதையில் பூத்துக் குலுங்கும் செடி, சிலுவையில் தான் எமது ஆன்மாவிற்கு தேவையான சக்தியும் ஒளியும் இருக்கிறது என்கிறார் முத்திப்பேறுபெற்ற அன்னை ஆன்மேரி ழாவுஹே.

வாழ்க்கையிலே பல்வேறுபட்ட துன்பங்களாலும் துயரங்களாலும் இழப்புக்களாலும் பிரிவுகளாலும் நாள்தோறும் நாமும் சிலுவைகளைத்தானே சுமக்கின்றோம் என நாம் கண்ணீர் விடுவது தொடர்கதையாகவே செல்கின்றது. ஏனெனில் எமக்கு துன்பங்களை சுமக்க உடன்பாடில்லை. கஷ்டங்களை அனுபவிக்க விருப்பமில்லை. வாழ்வில் தோல்விகளை ஏற்றுக்கொள்ள சக்தியில்லை. வாழ்வின் உலகியல் சுகங்களை விட்டுக்கொடுக்க மனமில்லை. ஏனெனில் நாம் வாழ்வை சரியாக புரிந்து கொள்வதில்லை. எமது துன்பங்களைப் பற்றி பேசும் நாங்கள் எமது இயலாமைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பது வெளிப்படை உண்மை. அநீதிகளை காண்கின்ற போது நாம் மௌனமாகின்றோம்.

உண்மையை எடுத்துரைக்க எம்து நாவு ஒருபோதும் அசைவதில்லை. வாய்ப்பேச்சினால் மட்டுமே நாம் அமைதியை ஏற்படுத்த முனைகின்றோம். மற்றவர்களை பேச்சினால் கொல்வதே எமது பொழுது போக்கு. இவ்வாறு அர்த்தமற்ற வாழ்வு வாழும் நாம் துன்பங்களை கண்டு அஞ்சி அவை கடவுளின் தண்டனை என முத்திரையிடுவது கண்கூடு. சிலுவை இல்லாத வாழ்வு ஒரு உண்மை வாழ்வாக இருக்காது என்பதனை கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து இச்சிலுவை வழி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## குற்றவாளிகளை அரசியலில் இணைக்கும் அமைப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

### ஸ்ரீ.சு. கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவிப்பு


குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை அரசியலில் இணைத்துக் கொள்ளும் தொகுதி அமைப்பாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சில தொகுதி அமைப்பாளர்கள் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

கஹவத்தை இரட்டைக்கொலை தங்காலை, வெளிநாட்டுப் பிரஜை கொலை, வெலிகாபொல இளைஞர் கொலை, பாலியல் வன்முறை, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு கட்சி எந்தவிதமான மன்னிப்பையும் வழங்காது.

அவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு ஆதரவையும் அடைக்கலத்தையும் வழங்கும் சிரேஷ்ட அரசியல் வாதிகளுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (அ-2)







இளையான்குடிமாற நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கருத்தாடலும் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் தொடக்கவுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவதையும் இளையான் குடிமாற நாயனார் புராணம் காட்டும் வாழ்வியல் என்னும் தலைப்பில் பண்டிதர் சைவப்புலவர் வ.ஆ.தங்கமயில் கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# நீதி அமைச்சின் பெயர்ப்பலகையை பயன்படுத்துவோருக்கு நடவடிக்கை

## நீதி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நீதி அமைச்சின் பெயர் பலகையை சட்டவிரோதமான முறையில் வாகனங்களில் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனுக்கு அறிவித்துள்ளார்.

நீதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள வாகனங்களைத் தவிர பெயர் பலகையை முறைகேடாக பாவித்து வாகனங்களை செலுத்துவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஹக்கீம் கோரியுள்ளார்.

இத்தகவலை நாடு முழுவதுமுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு நீதி அமைச்சர் ஹக்கீம் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் சில தனியார் வாகனங்களில் நீதி அமைச்சின் பெயர்ப்பலகை காணப்படுவதாக தெரியவந்துள்ளது. இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கும் நீதி அமைச்சரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களில் நீதி அமைச்சின் பெயர்ப் பலகையை சட்டவிரோதமான முறையில் பல தனியார் வாகனங்களில் பயன்படுத்துவதாக நீதி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. (அ-2)

# பொதுமக்களுக்கு புரியக் கூடிய வகையில் முத்திரைகள் பொறிக்கப்பட வேண்டும்

சீன மொழியில் முத்திரை பொறிக்கப்பட்ட பழரச வகைகள் மற்றும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விநியோகத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

•தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சீந்திப்பந்தல் என்ற இடத்தில் வைத்து கீரிமலை பொது சுகாதார பரிசோதகர்களால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

தென்னிலங்கையிலிருந்து வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்டு மேற்படி பழரசம், சோளன், கச்சான் அல்வா பைக்கற்றுக்கள் உள்ளிட்ட பொருட்கள் விநியோகம் செய்து கொண்டிருக்கும் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய உணவு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மருந்து, உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி இலங்கையில் பொது மக்கள் புரிந்து கொள்ள முடியாத மொழியில் முத்திரைகள் பொறிக்கப்பட்டு எந்த பொருட்களும் விற்பனை செய்யப்படலாகாது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மேர்வினுக்கு எதிரான விசாரணைகள் பூர்த்தி

களனி பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இரண்டு தரப்பினரும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப் பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விசார்ணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-2)




★ கி.மு.597-பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப்பற்றினர்.

★ 1190-சிலுவைப் படையினர் (Crusaders) யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

★ 1521-மகலன் பிலிப்பைன்சை அடைந்தான்.

★ 1792-சுவீடன் மன்னன் மூன்றாம் குஸ்டாவ் சுடப்பட்டான். இவன் மார்ச் 29 இல் இறந்தான்.

★ 1926-முதலாவது திரவ- எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை மசாசுசெட்சில் ராபர்ட் கொடார்ட் என்பவர் செலுத்தினார்.

★ 1939-பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பெஹேமியா மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.

★ 1942-முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது. (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது).

★ 1945-இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் 20 நிமிடக் குண்டு வீச்சில் ஜேர்மனியின் வூர்ஸ்பேர்க் நகரின் 90 வீதம் அழிந்தது. 5 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1962-மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமல் போனது.

★ 1963-பாலியில் ஆகூங்க் மலை நெருப்பு கக்கி 11 ஆயிரம் பேர் வரை இறந்தனர்.

★ 1966-ஜெமினி 8, நாசாவின் 12 ஆவது மனிதரைக் கொண்டு சென்ற விண்கலம் ஏவப்பட்டது.

★ 1968-வியட்நாம் போர்: மைலாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 350 முதல் 500 வரையிலான வியட்நாமியர்கள் அமெரிக்கப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1969-வெனிசுவேலாவில் உள்ளூர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 155 பேர் உயிரிழந்தனர்.

★ 1985-அசோதியேட்டட் பிரஸ் ஊடகவியலாளர் டெரி ஆன்டர்சன் பெய்ரூட் நகரில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் டிசெம்பர் 4 ஆம் திகதி 1991 ஆம் ஆண்டில் விடுதலை ஆனார்.

★ 1988-ஈராக்கில் குருதிய நகரான ஹலப்ஜாவில் நச்சு வாயுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

★ 2006- மனித உரிமைகளுக்கான ஐ.நா. அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச் சபை ஆதரவாக வாக்களித்தது.

### பிறப்புக்கள்

★ 1751-ஜார்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (இ.1836)

★ 1789-கியோர்க் ஓம், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ.1854)

★ 1839-ரெனே சளி- புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1907)

★ 1918-பிரெடெரிக் ரெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1998)

★ 1929-இரா. திருமுருகன், தமிழறிஞர்

★ 1953-ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயக்கம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்

### இறப்புக்கள்

★ 1914-சார்ல்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1843)

★ 1935-ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1876)

★ 1940-செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1858)


★ 1945-எம்.ஜே.லெகொக், அடிகளார், அருட்தந்தை (பி.1880)

★ 1998-டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)

# அதிசய உலகம்...



## சுவாசத்தின் மூலம் கைத்தொலைபேசியை சார்ஜ் செய்யலாம் - புதிய கண்டுபிடிப்பு




மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத பொருளாக வலம் வந்து கொண்டிருக்கும் கைத்தொலை பேசியைச் சார்ஜ் செய்வதற்கு நவீன இலத்திரனியல் கருவி ஒற்று அறிமுகப்பட்டுப்பட்டுள்ளது.

அதாவது முகத்தில் அணியக்கூடியதும் நாம் சுவாசிக்கும் போது அந்த சுவாசத்தை மின்சக்தியாக மாற்றுவதுமான உபகரணம் உருவாக்கப் பட்டுள்ளது.இதன் மூலம் நாம் விழித்திருக்கும் போதும் தூங்கும் போதும் கைத்தொலை பேசியைச் சார்ஜ் செய்ய முடியும் என்பது விஷேட அம்சமாகும்.பிரேசிலை சேர்ந்த ஜோகோ பவுலோ லமோக்லியா என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த உபகரணமானது கடுமையான வேலைகளை செய்யும் போது அதிகளவு மின்சக்தியை வெளிவிடவல்லது.

அத்துடன் வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் இதனை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து சந்தைக்கு வரும் இந்த உபகரணம் 60 தொடக்கம் 70 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனிமூட்டத்தில் விமானத்தை ஓட்டும் நவீன கண்ணாடி கண்டுபிடிப்பு-நாஸா




வானிலை சில நேரங்களில் பிரச்சினை கொடுக்கும் நேரங்களில் குறிப்பாக கடுமையான பனிமூட்டம் ஏற்படுகின்ற காலங்களில் விமானங்களை பாதுகாப்பாக ஓட்டுவதற்கு விமானிகள் நிறையவே பயப்படுவார்கள்.

இப்படியான நேரங்களில் உலகெங்கும் அதிகளவு விமான விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தக் குறையை போக்குவதற்கு அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் சிறப்பு கண்ணாடி ஒன்றை உருவாக் கியுள்ளது. குறித்த கண்ணாடிக்கு விஞ்ஞானிகள் Goggles என்று பெயரிட்டுள்ளார்கள்.இந்த சிறப்பு கண்ணாடியை அணிவதன் மூலம் விமானங்களை பனிமூட்டத்திலும் ஓட்ட முடியும் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். அந்த படத்தினைப் பாருங்கள்.

## உலக சாதனை படைத்த மிக பிரமாண்டமான கேக்




. சீனாவில் சுமார் 8 மீற்றர் உயரமான கேக் ஒன்றை செய்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. இருபதிற்கும் மேற்பட்ட செவ் இணைந்து 24 மணி நேரத்தில் தயாரித்த இந்த கேக் ஆனது 2010 ஆம் ஆண்டு பரிசில் உருவாக்கப்பட்ட உலகின் மிக உயரமான 7.8 மீற்றர் கேக்கின் சாதனையை முறியடித்துள்ளது.

குறித்த பிரமாண்டமான கேக் தயாரிப்பதற்கு 500 கிலோ கிராம் நிறையுடைய முட்டைகள்,260கிலோகிராம் கோதுமை மா, 200 கிலோகிராம் பட்டர், 1கிலோ கிராம் பழவகைகள், 80 கிலோ கிராம் சொக்லேட் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உலக சாதனை கேக் மூலம் 3ஆயிரம் பேரின் பசியை போக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முப்பரிமாண உருவில் மனிதனை உருவாக்கும் விஞ்ஞானிகள்



முப்பரிமாண தோற்றங்களை திரைப்படத்திலும் புகைப்படங்களிலும் பார்த்து மகிழ்ந்திருக்கும் எமக்கெலாம் புதிய கண்டுபிடிப்பு ஒன்று அதிக சந்தோசத்தை தர இருக்கிறது. அதாவது முப்பரிமாண மனிதன் இதை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளான். விஞ்ஞானிகள் எலி,முயல் உட்பட பல்வேறு விலங்குகளை மருத்துவ பரிசோதனைக்காக விஞ்ஞானிகள் உருவாக்கினர்.

அதேபோன்று தற்பொழுது இங்கிலாந்து அறிவியல் அறிஞர்கள் அவதார் திரைப்பட தோற்றத்திலான முப்பரிமாண வடிவில் கணனி மனிதர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் மருத்துவத்துறையில் புதிய முன்னேற்றங்களும் கண்டுபிடிப்புக்களும் அதிகரிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## வைரத்தினாலான கார்



இன்றைய மனித வாழ்வில் ஆடம்பரத்தினை விரும்பாத மனிதர்களே இருக்க மாட்டார்கள். அதிலும் ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் விரும்பும் பொருளாக கார் உள்ளது.

புதிய புதிய மொடல்கள் வரும் போது பழையதை விற்று புதியதை கொள்வனவு செய்யவே முயற்சிப்பர் பலர். செல்வம் கொழிக்கும் நாடான சவுதி அரோபியாவில் ஒருவருக்கு வினோத ஆசை ஏற்பட்டுள்ளது. அதாவது அவர் பயன்படுத்தும் Mercdes SL ரக காரினை வைரங்களினால் அழகு படுத்தியுள்ளார். சுமார் 600 வைரங்களினால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக 4.8 மில்லியன் டொலர் செலவிடப்பட்ட இது பலருக்கு கனவாகவே இருக்கும். இக்காரினை தொட்டுப் பார்ப்பதற்கு 1000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும்.

## உலக சாதனைக்காக தெரிவான சுவாரஸ்யமான விளையாட்டு



மனிதர்கள் உலக சாதனை படைப்பதற்கு சிந்தனைகளின் அடிப்படையில் புதிய வினோத செயல்களை செய்து வருகின்றனர்.

அவர்களின் வினோத சிந்தனைக்கு அமைவாக கட்டில்களின் மேல் பயன்படுத்தும் மெத்தைகளை பயன்படுத்தி புதியதும் சுவாரஸ்யமானது மான விளையாட்டு ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த மாதம் லூசியானாவில் இவ் விளையாட்டு இடம் பெற்றுள்ளது. இதன் போது ஒவ்வொருவரும் மெத்தையை தமக்கு பின்னால் பிடித்தவாறு நிலத்தில் விழாமல் மிக வேகமாக சுற்ற வேண்டும்.

இந்த விளையாட்டில் சுமார் 850 பேர் பங்கு பெற்றுள்ளனர். இதனால் 550 பேரைக் கொண்டு பெல்ஜியத்தில் நடத்தப்பட்ட சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

# திருடனுக்கு தேள் கொட்டிய நிலையில் இந்திய அரசாங்கம்

## தமிழ் இனக்கொலையின் பங்காளி இந்தியா என்கிறார் வைகோ



பஞ்சசீலம் பேசிய இந்தியா, உலக அமை திக்கு குரல் கொடுத்த இந்தியா, மனித உரிமை மீறல்களை கண்டித்த இந்தியா, தற்போது இலட்சக்கணக்கான தமிழர்கள் இலங்கை யில் கொல்லப்பட்டதை உலக நாடுகள் கண் டிக்கையில் கண்டுகொள்ளாமல் உள்ளது.

ஐ.நா.சபையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் ஒன்றும் இலங்கையை கண்டிக்கும் தீர்மானம் அல்ல. கண் துடை ப்புக்காக இலங்கை அரசே நியமித்த குழு வின் அறிக்கையின் அடிப்படையிலாவது போர்க்காலத்தில் தமிழர்களுக்கு சிங்கள அரசு இழைத்த அநீதியையும் மனித உரிமை

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை இந் தியா ஆதரிக்காவிட்டால் தமிழகத்தில் இருந்து காங்கிரஸ் கட்சி துடைத்து எறியப்படும் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ எச்சரித்துள்ளார். இது குறித்து அவர் எப்.எம். ரேடி யோவுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,**

மீறல்களையும் ஆய்வு செய்ய வேண்டும் என்றுதான் அந்த தீர்மானம் வலியுறுத்து கிறது. இதற்கு கூட சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இலங்கை அரசு நடத்திய போருக்கு பண மும் ஆயுதமும் கொடுத்து உதவிய இந்தி யாவுக்கோ திருடனுக்கு தேள் கொட்டிய நிலை. அமெரிக்காவின் தீர்மானத்தை விட இந்தி யாவே ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திரு க்க வேண்டும். ஆனால், அது கொண்டு வராது. காரணம் இந்தியா இனக்கொலை யின் பங்காளி.

இந்த விவகாரத்தில் இந்தியா எடுக்கும் முடிவு இந்திய ஒருமைப்பாட்டை தீர்மானிக் கும். இந்த விடயத்திலும் இந்தியா துரோகம் செய்தால் வருங்கால தமிழ் சந்ததியினர் இந்திய ஒருமைப்பாட்டை உடைக்கும் நிலை உருவாகும்.

தமிழினத்திற்கு துரோகம் செய்த குற்றத் தில் காங்கிரசுக்கும் அதன் கூட்டணி கட்சி யான தி.மு.கவுக்கும் முக்கிய பங்கு உள்ளது. காங்கிரசின் இந்த முடிவு தமிழகத்தில் இரு ந்து அந்த கட்சியையே துடைத்து எறிந்து விடும் என்று எச்சரிக்கிறேன் என்றார். (அ-7)

# வேட்டைக்காரர் மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

மாதுரு ஓயா தேசிய பூங்காவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் மேற் கொண்ட முற்றுகை நடவடிக்கையின் போது வேட்டைக்காரர் ஒருவர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

ஹெனனிகல பகுதியைச் சேர்ந்த சுனில் ஜயசிறி (வயது 27) என்பவரே பலியானவர் ஆவார். தேசிய பூங்காவின் ஹெனனிகல பகுதியில் நள்ளிரவின் பின் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் குழு வொன்று 8 பேர் கொண்ட சட்டவிரோத வேட்டைக்காரர் குழுவை கைது செய்ய முற்பட்ட போதே இச்சம்பவம் இடம்பெற் றது. (அ-2)

# இலங்கை போர்க்குற்றம் தொடர்பில் பிரதமரின் பதிலில் திருப்தியில்லை

## ஜெயலலிதா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்ப டும் போர்க் குற்றங்களுக்கு எதிரான பிரே ரணைக்கு ஆதரவளிக்குமாறு வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே தமிழக முதல்வர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரதமருக்கு இரண்டு கடிதங்கள் அனுப் பியுள்ளதாக குறிப்பிட்ட அவர் ஐக்கிய நாடுக ளின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா முன்வைத்துள்ள பிரே ரணைக்கு இந்தியா ஆதரிக்க வேண்டு மென அதில் வலியுறுத்தியுள்ளதாகத் தெரி வித்தார்.

இந்தக் கடிதங்களுக்கு நேற்றைய தினமே பிரதமரிடம் இருந்து பதில் கிடைத்ததாகவும் தமிழக முதல்வர் குறிப்பிட்டார்.

ஆயினும் பிரதமரினால் அனுப்பப்பட் டுள்ள கடிதத்தில் எவ்வித உறுதிமொழிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் இதனால் தாம் பதில் தொடர்பில் திருப்தியடையவில்லை எனவும் தமிழக முதல்வர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# வவுனியாவில் போஷாக்கு உணவு தொடர்பான கலந்துரையாடல்

(வவுனியா)

இலங்கையில் தமிழ்மொழி மூலமாக போஷாக்கு உணவு தொடர்பான விசேட வேலைத்திட்டம் ஒன்று நெஸ்லே நிறுவன த்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சு வவுனியா பாடசாலை மாணவர்கள் மத்தியில் செயற்படுத்தி வருகின்றது.

தமிழ்மொழி மூலமாக தெரிவு செய்யப் பட்ட வவுனியாவைச் சேர்ந்த தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம், பூந்தோட்டம் மகா வித்தியாலயம்,பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம் மற்றும் முஸ்லிம் மகாவித்தி யாலயம், இலங்கை திருச்சபை தமிழ்க் கல வன் பாடசாலை என்பவற்றில் செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

500 பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குணவின் பயன்பாடு மற்றும் அவற் றின் பலாபலன்கள் தொடர்பான விளக்கங் கள் அளிக்கப்பட்டு வருவதுடன் மாணவர்கள் மத்தியில் போஷாக்கு நிலையும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்விசேட வேலைத்திட்டத்தில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோச கர்களான கி.யூட் பரதமாறன், இ.மாதவன், கொ.சண்முகதேவன், ஆ.சுபாஸ்கரன், திரு மதி மமோன்மணி ஆகியோர் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தினை மேற்கொ ண்டு வருகின்றனர். (அ-7)

# அமெரிக்காவின் பிரேரணை எம்மை தூக்குமேடைக்கு ஏற்றும் திட்டம்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தி தற்போதைய அரசியலமைப்பைக் கிழித் தெறிவதன் மூலமே எமது நாட்டுக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை தடுக்க முடியும் என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணி யின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மார்பில் அடித்துக்கொண்டு தாய் நாடு, தாய் நாடு எனப் புலம்புவதாலும் உணர்ச்சி களைத் தூண்டும் விதத்தில் உரையாற்றுவ தாலும் எதுவுமே நடக்கப் போவதில்லையெ ன்றும் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை களை நிறைவேற்று ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுமென எமக்கெதிராக ஜெனீவாவில் அமெரிக்காவி னால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இவ் வசனங்கள் படுபயங்கரமானவையா கும். எம்மைத் தூக்குமேடையில் ஏற்றுவத ற்கான திட்டமே இதுவாகும். நாம் பெற்ற வெற்றியை தலைகீழாக மாற்றி இலங்கை யின் சுயாதிபத்தியம், இறைமை ஆகியவற்றி ற்கு மரண ஊர்வலம் நடத்துவதற்கான முயற் சியாகும் என்றார். (அ-2)

# அரசாங்கமும் தவறிழைத்துள்ளது

## அமைச்சர் விக்ரமநாயக்க

கடந்த காலத்தில் இலங்கை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பிழை செய்துள்ளதாக சிரே ஷ்ட அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இங்கிரியவில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் நாட்டினை பாழாக்கிய சர் வாதிகாரிகள் தற்போது வெவ்வேறு தோற்றங் களில் நாட்டை பாழாக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை வெளிநாட்டு அழுத்தங்களு க்கு உட்படுத்தியதே நாம் விடுத்த பிழையான விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-7)







யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதனையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் உரையாற்றுவதையும் மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# இலங்கைப் போர்க்குற்றம் தமிழக எம்.பி.க்கள் அமளி

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக மார்ச் 23-ஆம் திகதி கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் குறித்து தனது நிலையை மத்திய அரசு தெளிவுபடுத்த வலியுறுத்தி தமிழக எம்.பி.கள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் செவ்வாய்க் கிழமை செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

மாநிலங்களவை முடங்கியது. காலை 11 மணிக்கு அவைத்தலைவர் ஹமீது அன்சாரி தலைமையில் மாநிலங்களைவை தொடங்கியது. அப்போது கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு தேசிய பாயங்கரவாத தடுப்புமையம் தொடர்பாகப் பேச மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜெட்லி அனுமதி கோரினார்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் பற்றி விவாதிக்கவேண்டும் என்று தி.மு.க. மாநிலஙகளவைத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தினார்.

அதற்கு அனுமதி மறுத்த அவைத் தலைவர் ஹமீது அன்சாரி, "உங்கள் முறை வரும்போது பேசலாம்" என்று கூறினார்.

அதையடுத்த திருச்சி சிவா தலைமையிலான தி.மு.க. எம்.பி.க்கள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியாவின் நிலையைத் தெளிவுபடுத்துமாறு அவையின் மையப்பகுதிக்கு சென்று கோஷம் எழுப்பினார்.

அவர்களைத் தொடர்ந்து அ.தி.மு.க. அவைத்ததலைவர் மைத்ரேயன் தலைமையில் அக்கட்சி எம்.பி.க்கள், "இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்" என்று கோஷம் எழுப்பியபடி அவையின் மையப்பகுதிக்கு சென்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் டி.ராஜா, மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் எம்.பி. வரதராஜன் உள்ளிட்டோரும் அரசின் நிலையை தெளிவுபடுத்த வேண்டும் என்று குரல் கொடுத்தனர். அதையடுத்து, தான் பிறகு பேசுவதாகக் கூறிவிட்டு அருண் ஜேட்லி இருக்கையில் அமர தமிழக எம்.பி.க்கள் பேசத் தொடங்கினர்.

தி.மு.க. மாநிலங்களவைத் தலைவர் திருச்சி சிவா "இலங்கைப் போரில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது கண்டிக்கத்தக்கது. அது தொடர்பான தீர்மானத்தை ஆதரிப்பது நமது தார்மீகக் கடமையாகும்.

அ.தி.மு.க. மாநிலங்களவைத் தலைவர் வி.மைத்ரேயன் "இலங்கையில் போர்க்குற்றங்கள் புரிந்தவர்கள்

**நன்றி : இணையம்**

மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த விவகாரம் பற்றி பிரதமரின் கவனத்துக்கும் தமிழக முதல்வர் கொண்டு சென்றுள்ளார். இதுபற்றி பிரதமரிடம் இருந்து பதில் தேவை. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்குமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்."

பா.ஜ.க. மாநிலங்களவை உறுப்பினர் வெங்கய்ய நாயுடு, "மத்திய அரசு இதுவரை இந்த விவகாரத்தில் எந்த நிலைப்பாடும் எடுக்காமல் உள்ளது, அதைத் தெளிவுபடுத்தவேண்டும்."

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி மாநிலங்களவை உறுப்பினர் டி.ராஜா, "இலங்கையின் நட்புநாடு என்ற முறையில் அந்நாட்டில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு காரணமானவர்களைத் தணிடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் கொண்டுவர வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும்."

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், "மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள தமிழ் எம்.பி.க்கள் அடங்கிய நம்பகத்தன்மை கொண்ட குழு மூலம் விசாரணை நடத்த வேண்டும். மனித உரிமை மீறலுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க அந்நாட்டு அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்."

காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் ,ஞானதேசிகன், "இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் இந்தியா ஆதரிக்க வேண்டும். போரில்




பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளும் மருத்துவ உதவிகளும் வழங்கப்படும் என்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தெரிவித்துள்ளது. நாம் கதவை அடைத்து விட்டால், அந்த மக்களுக்கு யார் உதவுவது? இது தொடர்பாக முடிவை பிரதமரிடம் விட்டுவிட வேண்டும்" என்று ஞானதேசிகன் பேசினார்.

தி.மு.க., அ.தி.மு.க. எம்.பி.க்கள் தொடர்ந்து கோஷமிட்டபடி இருந்ததால், நண்பகல் 12 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது. மறுபடி அவை கூடியபோது, அவர்கள் அமளியில் ஈடுபட்டதால் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்ட மாநிலங்களவை பிறகு 3 மணிவரையும், அதன் பின்னர் நாள் முழுவதுமாக ஒத்திவைக்கப் பட்டது. மக்களவையில்... செவ்வாய்க்கிழமை காலை மக்களவை கூடியதும் கேள்வி நேரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தி.மு.க. நாடாளுமன்றக் குழுத்தலைவர் டி.ஆர். பாலு, "ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்று குரல்கொடுத்தார். தி.மு.க. உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டி.கே.எஸ். இளங்கோவன், ஆதிசங்கர் உள்ளிட்ட எம்.பி.க்களும் இலங்கை எதிர்ப்புத் தீர்மானத்தை ஆதரிக்கக்கோரும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி குரலெழுப்பினர்.

இந்தவிடயத்தில் மத்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்தும்படி கோரி அ.தி.மு.க.வின் மக்களவைத் தலைவர் தம்பித்துரை தலைமையில் அக்கட்சியின் எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

மத்திய அரசு மௌனம் சாதிப்பதைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி.க்கள் லிங்கம், நடராஜன், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி எம்.பி. தொல்.திருமாவளவன், காங்கிரஸ் எம்.பி.க்கள் என்.எஸ்.வி.சித்தன், கே.எஸ்.அழகிரி, மாணிக்தாகூர், விஸ்வநாதன் உள்ளிட்டோரும் தனது நிலையை மத்திய அரசு தெளிவுபடுத்தக் கோரி குரல் கொடுத்தனர். அதை அடுத்து மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசினார்.

மீண்டும் அமளி... உணவு இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் 2 மணிக்கு மக்களவை மீண்டும் கூடியபோது "வெளியுறவு அமைச்சர் எப்போது வருவார்? அரசு தனது நிலையை எப்போது தெளிவுபடுத்தும்?"என்று டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார். அ.தி.மு.க. மக்களைவைத் தலைவர் தம்பிதுரை, "உடனடியாக அரசின் நிலையைத் தெளிவுபடுத்துங்கள்" என்று வலுயுறுத்தினார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்ற வாசகம் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி அவையின் மையப்பகுதிக்கு சென்று மற்றய அ.தி.மு.க. எம்.பி.க்கள் கோஷம் எழுப்பினர்.

அதை அடுத்துப் பேசிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், "இந்த விவகாரத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மறுநாள் அவையில் பதிலளிப்பார்" என்றார்.

**பிரணாப் முகர்ஜி பதில்**

இந்த விவகாரம் குறித்து மக்களவையில் பேசிய பிரணாப்முகர்ஜி "குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டுக்கும் எதிராகக் கொண்டுவரும் தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்பதுதான் இந்தியாவின் பாரம்பரிய நிலைப்பாடு.

ஐ.நா.மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் எந்த திகதியில் கொண்டுவரப்படும் அதன்மீது எப்போது விவாதம் நடைபெறும் என்ற விவரங்கள் தெரியவில்லை. இது தொடர்பாக அங்குள்ள நமது பிரதிநிதி, அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும். இவற்றை விளக்கி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் பிரதமர் மன்மோகன்சிங் ஏற்கனவே கடிதம் எழுதியிருக்கிறார். கூடுதல் தகவல் வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்பினால், இது குறித்து விளக்கமளிக்கும்படி வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

**எஸ்.எம்.கிருஸ்ணாவின் பதில்**

மக்களவையில் தமிழக எம்.பி.க்களின் அமளியை அடுத்துப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், "வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா டெல்லியில் இருப்பதால் மறுநாள் அவையில் பதிலளிப்பார்" என்று தெரிவித்தார். அந்தப்பதிலில் திருப்தி அடையாத தி.மு.க எம்.பி.க்களை இருக்கையில் அமரும்படி மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கேட்டுக் கொண்டார். அதை அடுத்து அவர்கள் இருக்கைக்குத் திரும்பினர் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து குரல் கொடுத்தபடி இருந்தனர். அவர்களை நோக்கி தமிழில் பேசிய சிதம்பரம் "தயவு செய்து இருக்கையில் உட்காருங்கள் சேர். உங்களுக்கு திருப்தி அளிக்க வேண்டிய பதில் நாளை (புதன்-14.03.2012) அளிக்கப்படும்" என்று தெரிவித்தார். அதை அடுத்து அ.தி.மு.க உறுப்பினர்கள் இருக்கைக்குத் திரும்பினர்.

**மறுநாள் அவையில்**
**கிருஷ்ணாவின் அறிக்கை**

வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா உரையாற்றிய பின், அவரின் உரையைக் கண்டித்து நாடாளு மன்ற உறுப்பினர் சிவா உரையாடினார். வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா சபையில் சமர்ப்பித்த அறிக்கை இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையே தவிர அது இந்தியாவின் அறிக்கை அல்ல. என்றும் இலங்கை கொடுக்கும் அறிக்கையையே இந்திய மக்களவையில் வெளிவிவகார அமைச்சர் வாசித்து வருகிறார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

"இலங்கையுடனான உறவு வரலாற்று பூர்வமானது, நட்பு ரீதியானது என்று நீங்கள் கூறுகிறீர்கள் இப்படியே நீங்கள் கூறிக்கொண்டிருந்தால், இலங்கையில் இந்தியாவுக்காதரவான அத்தனை தமிழர்களும் கொன்று குவிக்கப்பட்டுவிடுவார்கள்.

பலகாலமாக எங்களது சகோதரர்களை கொன்று குவித்துவரும் ஒரு நாட்டுடன் நாம் எப்படி வரலாற்று பூர்வமான உறவை பராமரிக்க முடியும், நட்பாக இருக்கமுடியும் எனவே, இனியும் அப்படிச்சொல்லாதீர்கள்" என நாடாளுமன்ற உறுப்பினர் சிவா தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தனது அறிக்கையை படித்துவிட்டு அமர்ந்தபோது தி.மு.க. உறுப்பினர்கள் மொத்தமாக எழுந்து கிருஷ்ணாவின் உப்புச்சப்பில்லாத பதிலைக் கண்டித்து குரல் கொடுத்தனர். அவர்களை அமருமாறு துணைத் தலைவர் ரஹ்மான்கான் கோரினார். ஆனால், கிருஷ்ணாவின் பதில் குறித்து கடுமையாக விமர்சித்த தி.மு.க. உறுப் பினர்கள் அவரின் உரை நகலைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியேறினர். அ.தி.மு.க.வினரும் கிருஷ்ணாவின் உரையைக் கண்டித்து வெளிநடப்பு செய்தனர்.

* * *

# பங்குனிமாத இராசிபலன்கள்

## 14.03.2012 தொடக்கம் 12.04.2012 வரை




(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் வரை)

**ஆதாயம் அதிகரிக்கும்!**

*எந்த காரியத்தையும் எளிதில் சாதித்து கொள்ளும் வல்லமை பெற்ற மேட இராசி நேயர்களே!*

சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் தங்கள் குணங்களை மாற்றிக்கொள்ள மாட்டீர்கள். பிடிவாத குணம் உங்களுக்கு பிறப்புரிமையாக இருக்கும். பிறருடைய அறிவுரைகளுக்கு ஒரு சில சமயங்களில் மட்டுமே செவி சாய்ப்பவர்கள். மக்கள் சக்தி உங்களிடம் அதிகமாகவே இருப்பதால் மாற்றுக் கருத்துடையோரை கூட எளிதில் மாற்றி உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளச் சொல்லி விடுவீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இராசிநாதன் செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருந்தாலும் இராசியில் உள்ள குரு அதை பார்த்து புனிதப்படுத்துவதால், குரு மங்கல யோகம் உருவாகிறது. எனவே மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் தங்கு தடையின்றி நடக்க வழி பிறக்கும். மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசியை பார்க்கும் சனி, வக்ர இயக்கத்தில் இருந்தாலும்பின்னர் கன்னி இராசிக்கு செல்வதால் திடீர் மாற்றங்கள் சிலவற்றை சந்திக்க நேரிடும்.

சூரிய, சனி பார்வை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஒரு சில காரியங்களில் திடீர் முடிவெடுக்க முடியாமல் திண்டாடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். குறிப்பாக பூர்வீக சொத்துக்கள், தொழிற்துறை சம்பந்தப்பட்ட வகையில் உள்ள பங்குதாரர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். அதை உடனடியாக தீர்த்துக் கொள்வது நல்லது.

தனாதிபதியின் சஞ்சாரம் நன்றாக இருப்பதால் மாதம் முழுவதும் பண புழக்கத்திற்கு குறைவிருக்காது. புதன் நீச்சம் பெறுவதும் ஒரு வழிக்கு நன்மைதான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம் என்பதற்கு ஏற்ப எதிர்பாராத நல்ல பலன்களை மாதத்தின் கடைசி வாரத்தில் சந்திக்க போகிறீர்கள்.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனி வக்ர இயக்கத்தில் கன்னி இராசிக்குள் செல்கிறார். உங்கள் இராசிக்கு 10, 11க்கு அதிபதியான சனி பகவான் ஆறில் வக்ரம் பெறும் பொழுது தொழில் ரீதியாக புதிய கடன்கள் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். அரசு ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு பற்றிய சிந்தனை செயல்பட தொடங்கும். இந்த காலத்தில் முறையாக சனி பகவான் வழிபாட்டையும், எள் தீபம் ஏற்றும் முறையையும் கடைப்பிடிப்பது நல்லது.

எதிர்வரும் 27ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 2, 7க்கு அதிபதி தன ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிக்க போவதால், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

நிகழ்கால தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கி சேர்க்க முன்வருவீர்கள். அதுமட்டுமல்ல வீட்டிற்கு தேவையான மின்சாதன பொருட்களும் வாங்கி மகிழ வாய்ப்புகள் கைகூடி வரும்.

புதன் ஏதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி நீச்சம் பெறுகிறார். இது உங்கள் இராசியை பொறுத்தவரை நன்மைதான். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். அரசு வழி சலுகைகள் ஆச்சரியப்படும் விதத்தில் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சி தரும் விதத்தில் ஒத்துழைப்பும் உருவாகும்.

இந்த மாதம் அஷ்டமத்து இராகு பலம் பெறுவதால் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். துயரங்கள் துள்ளி ஓடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இராசிநாதன் வக்ரம் பெறுவதால் எதையும் யோசித்து செய்வதே நல்லது. உடல் ஆரோக்கியம் ஒத்துழைப்பு குறையலாம். மருத்துவ ஆலோசனைக்கு என்று ஒரு தொகை செலவாகும். இருப்பினும் வருமானம் திருப்தியாக இருக்கும்.

கணவர் உங்களிடம் கொடுத்த தொகையை செலவழிக்காமல் சிக்கனப்படுத்த இயலாது. உடன் பிறப்புக்களிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். மாதத்தின் மையப் பகுதியில் நீங்கள் கேட்டபடியே நகைகளை வாங்கித்தர குடும்ப பெரியவர்கள் முன்வருவர். அங்காரக வழிபாடு அல்லல் தீர்க்கும்.

## சிவல்புரி சிங்காரம்

(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் பாதங்கள்)

**தொட்ட காரியங்களில் வெற்றி!**

*வசதியாக வாழவேண்டும் என்ற எண்ணத்தை இளமையிலே வளர்த்துக் கொண்டிருக்கும் இடப இராசி நேயர்களே!*

உதவி செய்யும் ஒப்பற்ற குணத்தை பெற்று இருப்பதால் தான் உங்களை நோக்கி ஒவ்வொருவரும் ஓடோடி வருகிறார்கள். உழைப்பைக் காட்டிலும் அதிர்ஷ்டமே உங்களை அதிகம் கவருகிறது. உங்கள் பேச்சில் மயங்கி உடனிருப்பவர்கள் தலைமை பொறுப்பை கூட தருவதற்கும் தயங்கமாட்டார்கள். ஆன்மீகத்தில் நீங்கள் அடியெடுத்து வைக்கும் போதுதான் அகில புகழ் உங்களுக்கு கிடைக்கிறது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, அஷ்டமாதிபதி குரு பன்னிரெண்டில் மறைவு, பன்னிரெண்டுக்கு அதிபதி செவ்வாய் வக்ரம், ஆறுக்கு அதிபதி சுக்ரன் பன்னிரெண்டில். எனவே விபரீத இராஜயோகம் செயற்பட போகிறது. திடீர் வளர்ச்சி தித்திக்க வைக்கும். முன்னேற்ற பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்யும் ஆற்றலை பெறுவீர்கள். நிகழ்கால தேவைகள் ஒவ்வொன்றும் பூர்த்தியாகும். சனியின் வக்ர இயக்கம் கன்னி இராசிக்குள் செல்லும் போது கொஞ்சம் கவனம் தேவை. பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகி மறையலாம். சொற்பேச்சு கேட்காத பிள்ளைகளால் விரயங்கள் ஏற்பட்டு அதை சமாளிக்கும் நிலையும் உருவாகும்.

புதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. நெருங்கிய உறவினர்களிடையே நெருடல்கள் ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவ எதையும் யோசித்து செய்வது நல்லது. ஜென்ம கேதுவிற்கு பரிகாரமாக வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப்பெருமானை கைகூப்பி தொழுதால் கவலைகள் அகலும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி கன்னி இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். பின்நோக்கி செல்லும் சனி பகவான் உங்கள் எண்ணங்களை எளிதில் நிறைவேற்றுவார். காரணம் சூரிய பார்வை அதன் மீது பதிகின்றது.

தொழில் ஸ்தானம் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்ரம் பெறும் போது தொழில் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். அது செயற்படுமா? என்பது சந்தேகம்தான்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். கடித அனுகூலம் உண்டு. நீண்டதூர பயணங்களால் நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்கலாம்.

உடனிருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லையும் அகலும். பெண் வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும் இந்த நேரத்தில் விலகி சென்றவர்களும் விரும்பி வந்து சேரலாம்.

ஏப்ரல் 9 ஆம் திகதி புதன் நீச்சம் பெறபோகிறார். 2,5 க்கு அதிபதி நீச்சம் பெற போவதால் பிள்ளைகளின் படிப்பு நலன் கருதியோ அல்லது இடமாற்றம் செய்யும் சூழ்நிலை கருதியோ ஒரு தொகை செலவிடுவீர்கள். எப்போதோ விற்ற பூர்வீக சொத்துக்கள் இப்போது பிரச்சினைகளை உருவாக்கலாம். நீண்ட தூர பயணங்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.




இந்த மாதம் வக்ர சனி தக்க பலன்களை வழங்க அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த மாதம் இராசிநாதன் சுக்ரன் ஆரம்பத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் மாதத்தின் மைய பகுதியில் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். எனவே கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மாதக்கடைசியில் குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு.

(தொடரும்)

# அமெரிக்கா, தமிழர்கள் மீது கொள்ளும் அதீத கவனம் ஏன்?

(கொழும்பு)

தமிழீழத் தனியரச நிர்வாக காலத்தில் மேற்குலகம் தமிழ் மக்கள் மீது காட்டியளவு கவனத்தினை தொடர்ந்தும் காட்டிவருகின்றதென்பதையே ஐ.நாவின் மனிதவுரிமைகள் அமர்வில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணைகள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பில்லையென்பதையும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளது என்பதனையும் ஐ.நா. சபையில் முதல் முதலாக வல்லரசொன்று சொல்ல முன்வந்துள்ளதானது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதற்காக அமெரிக்காவிற்கு எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என டென்மார்க் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தமிழர்களின் நலனென்பதை விட தனது ஆதிக்கத்திற்கு ராஜபக்ஷவை அடிபணிய வைக்க முடியாமையே முக்கிய காரணமாகும்.

தமிழர்களின் நலன் கருதி அமெரிக்கா நடத்திருக்குமேயானால் குறைந்தபட்சம் ஐ.நா. நிபுணர் குழுவால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை அது ஐ.நா. மனிதவுரிமை ஆணையகத்தில் முன்வைப்பதோடு அதற்கான அங்கீகாரத்திற்கும் பாடுபட்டிருக்கும். இதனிடையே ஏன் அமெரிக்கா தமிழர்களுக்காக பாடுபடவேண்டுமென்ற கேள்வியினையும் நாம் கேட்டுக்கொள்ளத் தவறக் கூடாது.

ஒரு அரசானது, தன்னைத்தானே நிரபாரதியென்று தீர்ப்பு வழங்குவதானது, ஒன்றும் அதிர்ச்சியானதோ அல்லது அதிசயப்படக்கூடிய விடயமோ அல்ல. ஆனால், தாங்களாகவே தயாரித்த பிரேரணைகளை நடைமுறைப்படுத்த மறுப்பதும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமெரிக்கா திணிப்பதும் நகைப்பிற்குரிய விடயமாகும்.

உலகத்தில் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தமது செல்வாக்கினை இழந்து கொண்டு வருவதாலும், உலகின் மக்கள் தொகை கூடிய நாடுகளான சீனா, இந்தியாவுடன் ரஷ்யா போன்ற நாடுகள் கைகோர்த்து அமெரிக்காவிற்கெதிராக நடந்து கொள்வதாலும் தனது செல்வாக்கிற்குள் கொண்டு வரக்கூடிய நாடுகளை சிநேகித பூர்வமாகவோ அல்லது மிரட்டியோ தனது ஆளுமைக்கு கீழ் கொண்டு வருவதற்கான பிரயத்தனங்களில் ஒன்றாகவே ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக நடைபெறும் நாடகத்தினை நோக்க முடியும்.

அமெரிக்காவின் இந்நடவடிக்கை தமிழ் மக்களின் விடுதலையுணர்வினையும் ஜனநாயக ரீதியிலான விடுதலை நோக்கிய போராட்டங்களையும் மழுங்கடிக்கும் நோக்குடனும், தமிழர்கள் சுயமாகச்சிந்தித்துச் செயற்படும் வேகத்தினை குறைப்பதற்கானதுமான ஒரு முயற்சியாக்கூட இது அமையலாம். (அ-2)

## ஓட்டப்போட்டிகள்

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் வீரர்கள் உரிய நேரத்திற்கு அச்சுவேலி சந்திக்கு சமூகம் தந்து போட்டியில் பங்கு பற்றுமாறு பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (அ-3-24-134)

## பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரசசேவை நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நம்பிக்கை நிதிய தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி.மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ப.ஜெயராசாவும் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், பளைப்பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கண்டாவளைப் பிரதேச செயலர் தி.முகுந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-84)

## தமிழகத்தில் வாழும் தமிழீழ ஆதரவாளர்களுக்கு விசாரணை?

### அரசாங்கம் கோரிக்கை

தமிழகத்தில் உள்ள தமிழீழ ஆதரவாளர்களுக்கு எதிராக இந்திய அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரிவசம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். த.இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் தலைவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிப்பது அவர்களின் விருப்பம்.

ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்கான தமிழீழத்துக்கு அவர்கள் ஆதரவளிப்பதாக இருந்தால் அது தொர்டர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான தொடர்பே தமிழக அரசியல் தலைவர்களை இலங்கைக்கு எதிராக போராட்டம் நடத்த தூண்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சின் 2011 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் மணற்காடு சென் அன்ரனிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கென இளைப்பாறு மண்டபம் கட்டுவதற்கு 12,50,000 ரூபா நிதி ஒதுக்கீடு உதவியமைக்காக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில் நீரியல் வளங்கள் உதவிப்பணிப்பாளர் இ.ரவீந்திரன் முன்னைநாள் கடற்றொழில் பரிசோதகர் S. சுதாகரன் மற்றும் திணைக்கள ஊழியர்கள் அனைவருக்கும் எமது சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணற்காடு சென் அன்ரனிஸ்
கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்
மணற்காடு.

(7709)



# University of Jaffna, Sri Lanka
# Faculty of Graduate Studies

## Admission for Postgraduate Research Programme
## M.Phil & Ph.D-2012

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy(M.Phil.) and Doctor of Philosophy(Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below.

**M.Phil:-**
Agricultural Engineering, Psychology, Sanskrit, Fine Arts (Music, Drama&Theatre), Management(Human Resource Management, Accounting Management, Financial Management, Marketing Management), Christian Civilization.

**M.Phil,/Ph.D.:**
Agricultural Biology, Agronomy, Geography, Economics, Education, History, Sociology, Tamil, Linguistics, Biochemistry, Botany, Zoology, fisheries Science, Philosophy, Physics, Chemistry, Computer Science, Mathematics& Statistics, Physiology.

**Medium** Tamil/English
**Duration** Full Time (M.Phill.-02 Years : Ph.D - 03 Years)
Part Time (M.Phill.-03 Years : Ph.D - 04 Years)
**Closing Date for Application : 30/04/2012**

**Application Procedure:**
Relevant information and Prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna(T.P: 0212223608) on Production of a receipt in support of a payment of Rs 1000/- to the University Account number **162-1-001-6-0000880** at the people's Bank, University Branch, Thirunelvely or forwarding a money order of Rs 1000/- drawn in favour of **"The Bursar, University of Jaffna"** Request by post should be accompanied by a self-addressed envelope not less than 22.5x 10 cm (9"x4") in size affixing stamps to the value of Rs 40/-

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies on or before the closing date of application.

Illegible, late and incomplete applications will not be considered.

For further details please contact with the Faculty of Graduate Studies, University of Jaffna.

**Note:**
**Applicants will be selected on the basis of**
**(1) availability of supervisor in the particular topic of research.**
**(2) availability of admission in the particular field of research.**

Registrar
13/03/2012


(C-6085)

# 1GB கொள்ளவு கொண்ட கோப்பை 10MBயாக குறைக்க இலவச மென்பொருள்!!

பொதுவாக நாம் அதிக கொள்ளளவு கொண்ட கோப்புகளை WinZip,7-Zip போன்ற மென் பொருட்களின் துணையுடன் தான் கோப்புகளை compress பயன்படுத்து வோம்.

இந்த மென்பொருளானது மேற்கண்ட மென்பொருளை காட்டிலும் பத்து மடங்கு குறைவான கொள்ளவு கொண்ட கோப்புகளாக மாற்றித் (Compression) தருகிறது. மென்பொருளின் பெயர்: KGB Archiver

இம்மென்பொருளானது நம்முடைய கோப்புகளை மிகவிரைவாக குறைவான அளவுள்ள கோப்புகளாக மாற்றித் தருகிறது. 1GB அளவுள்ள கோப்புகளை வெறும் 10





MB அளவாக மாற்றித் தருகிறது. இவ்வாறு குறைந்த அளவாக compress செய்து தருவதால் அதிக கொள் ளளவு கொண்ட File களையும் நாம் எளிதாக பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. இது விண்டோஸ் மற்றும் லினக்ஸ் இயங்கு தளங்களை ஆதரிக்கிறது.

compression அளவுகளை உங்கள் விருப்பப்படி Very Weak, Low, Normal, maximum, High என்னும் வகையில் நாம் அமைத்துக் கொள்ளலாம். இம்மென் பொருள் நிறுவ உங்கள் கணனியில் 1.5 GHz Processer குறைந்த பட்சம் 256 MB Ram நிச்சயம்இருக்க வேண்டும்.

குறிப்பு:

இம்மென்பொருளை கொண்டு compress செய்த File களை அதே மென்பொரு ளைக்



கொண்டு தான் விரிக்க முடியும். எனவே, இம்மென்பொருளானது உங்கள் நண்பர்களிடத்தும் நிச்சயம் இருக்க வேண் டும். இம்மென்பொருளின் மூலம் வீடியோ கோப்புகளை compress செய்ய முடியாது.

ஏனைய வகை கோப்புகளை எளிதாக compression செய்து தருகின்றது. ஏனைய compression Software களைக்காட்டிலும் கோப்புகளை குறைந்த அளவிற்கு சுருக்கி தருவதாலும் இம்மென்பொருள் உண்மையிலேயே அதிக பயன்தரக் கூடிய ஒன்று.


அடிக்கடி அதிக கொள்ளவு கொண்ட கோப்புகளை பரிமாற்றம் செய்து கொள்ளும் நண்பர்களுக்கு இம்மென்பொருள் உதவும் என்பதில் சந்தேகமில்லை. மென்பொருளை தரவிறக்க சுட்டி: KGB Archiver

## கூகுள் பிளஸ் தமிழில்

இன்றைய உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமூக இணையத்தளமான கூகுள் பிளஸ் தற்பொழுது 60 மொழிகளில் கிடைக்கின்றது.

குறிப்பாக தமிழ் மொழியில் கிடைக்கின்றது. இதனைப் பெறுவதற்கு கூகுள் பிளஸ் தளத்தை திறந்து Settings என்பதை கிளிக் செய்யவும்.


அடுத்த Languages என்பதை கிளிக் செய்யவும். பின்னர் அங்கு உள்ள Languages கட்டத்தில் கிளிக் செய்து உங்களுக்கு விருப்பமான மொழியை தெரிவு செய்யவும்.




இதன் பின்னர் உங்களின் கூகுள் பிளஸ் கணக்கை மூடி விட்டு மறுபடியும் திறந்தால் நீங்கள் தெரிவு செய்த மொழிக்கு உங்கள் கூகுள் பிளஸ் கணக்கு மாறி இருக்கும்.




## கணனி பராமரிப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்



கணனி நன்றாக இயங்க நாம் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பாதுகாப்பு குறித்த பல்வேறு தகவல்கள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

1. உங்களுடைய இயங்குதளம் அப்டேட்டட் ஆக இருக்க வேண்டும். புதிய இயங்கு தளத்திற்கு மாற வேண்டும் என்பதில்லை. பயன்படுத்தும் இயங்கு தளத்திற்கான அண்மைக்காலத்திய அப்டேட் கோப்புகள் இறக்கப்பட்டு பதியப்பட்டிருக்க வேண்டும்.

2. நீங்கள் உருவாக்கிய தகவல்கள் பாதுகாப்பாக இருக்க சிறப்பான அண்டிவைரஸ் இருக்க வேண்டும். அதுவும் அவ்வப்போது அப்டேட்டட் ஆக இருக்க வேண்டும்.

3.தேவையில்லாமல் கணனி பூட் ஆகும் போதே தொடங்கி பின்னணியில் இயங்கும் புரோகிராம்கள் உங்கள் கணனி பணியை மந்தப்படுத்தும், தாமதப்படுத்தும். எனவே, தேவையற்ற புரோகிராம்கள் இருந்தால் நீக்கி விடுங்கள்.


4. பயர்வோல் ஒன்று அவசியம் வேண்டும் இயக்கத்துடன் வரும் பயர்வோல் கூட போதும்.

5. டூல் பார்களை அவ்வப்போது ட்யூன் செய்திட வேண்டும். தேவைப்படும் டூல் பார்களை மட்டும் இயங்க வைத்திட வேண்டும். தேவையற்ற டூல் பார்களை மூடி விட்டால் ரம் மெமரியில் இடம் கிடைக்கும். கணனியும் வேகமாக இயங்கும்.

6. அடுத்ததுதான் மிக முக்கியம். இந்த செயற்பாடு மேலே சொல்லப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கியதாகும் .மாதம் ஒரு முறையாவது கணனியில் முழுமையான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

## மவுசை கொண்டு மின்னஞ்சல்களை கட்டுப்படுத்தும் கூகுளின் முறை

1997 காலப்பகுதியில் அறிமுகமாகி மின்னஞ்சல் துறையில் கொடிகட்டிப் பறந்த (Yahoo)நிறுவனத்தை அதன் பின் தோன்றிய கூகுளின் ஜிமெயில் மின்னஞ்சல் சேவை பின்னுக்கு தள்ளியுள்ளது. இதற்கு மிக முக்கியமான காரணங்களாக விரைவான சேவையும் 7.6 GB வரையிலான சேமிப்பு வசதி வழங் குகின்றமையும் ஆகும்.




இவை தவிர பல் வேறு புதிய அம்சங்களையும் நாளுக்கு நாள் அறிமுகப்படுத்தி வருகின்றது. இதனடிப்படையில் inbox இல் காணப்படும்மின்னஞ்சல்களை மவுஸ் கொண்டு கட் டுப்படுத்தும் வசதியும் காணப்படுகிறது. இதனை நடைமுறைப் படுத்துவதற்குகீழ்வரும் படிமுறைகளை பின்பற்றுக

1.Mail Setting பகுதிக்கு செல்க

2. தோன்றும் விண்டோவில் Labs என்பதை தெரிவு செய்க

3. பின் அதில் காணப்படும் தேடுதலுக் கான பகுதியில் Mouse Gesture என தட்டச்சு செய்து தேடுக.

4. பின் Mouse Gesture என்பதை Enable செய்க

இப்போது உங்கள் இன்பொக்சில் உள்ள ஒரு மின்னஞ்சலை திறந்து பின் ஏனைய மின்னஞ்சல்களுக்கு செல்வதற்கு கிளிக் செய்து மவுஸை வலது, இடது பக்கங்களிற்கு அசைப்பதன் மூலம் மின்னஞ்சல்களை கையாள முடியும்.

## விண்டோஸில் இயங்கும் தொலைபேசி நொக்கியா புதிய அறிமுகம்

பிரபல செல்லிடத் தொலைபேசி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான நொக்கியா கோர்பரேஷன், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் மென்பொருட்கள் மூலம் இயங்கும் தொலைபேசிகளை அறிமுகம் செய்துள்ளது.

விண்டோஸ் மென்பொருட்கள் மூலம் இயங்கும் முதலாவது செல்லிடத் தொலைபேசி இதுவாகும். நொக்கியா கோர்பரேஷனும் உலகின் மிகப்பெரிய கணனி மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான மைக்ரோசொப்ட் கோர்பரேஷனும் 8 மாதங்களுக்கு முன்னர் புதிய செல்லிடத் தொலைபேசி தயாரிப்புக்காக கூட்டிணைவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இத் தொலைபேசிகள் அறிமுகமாகியுள்ளன.

580 டொலர் விலையுள்ள Lumia 800 மற்றும் 270 டொலர் விலையுள்ள Lumia 710 ஆகியன விண்டோஸ் 7 மென்பொருளில் இயங்குகின்றன.

அப்பிள் இன்கோர்பரேஷன் நிறுவனத்தின் ஐபோன் மற்றும் சாம்சங், கூகுளின் அன்ட்ரோய்ட் மென்பொருள் தொலைபேசிகளில் இழந்த சந்தை வாய்ப்புகளை நொக்கியா நிறுவனம் மீளப்பெற்றுக் கொள்ள இப்புதிய தொலைபேசிகள் உதவும் என சிலர் கூறுகின்றனர்.

ஆனால், உலகில் முன்னணி செல்லிட தொலைபேசி தயாரிப்பு நிறுவன பின்லாந்தை தளமாகக் கொண்ட நொக்கியா நிறுவனத்தைப் பொறுத்தவரை இது மிகச் சிறிய , மிகத் தாமதமான ஒரு முயற்சி என




சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை மலிவு விலையிலான 4 புதிய ஸ்மார்ட்போன்களையும் நொக்கியா அறிமுகப்படுத்தியுள்ளது. இணைய உலகிற்கு மேலும் 100 கோடி பேரை இணைக்க உதவுவதற்காக இத்தொலைபேசிகளை அறிமுகப்படுத்துவதாக அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீபன் எலோப் லண்டனில் செய்தியாளர் மாநாடொன்றில் கூறியுள்ளார்.

# தமிழர்கள் என்றாலே இந்திய அரசு தொடர்ந்து அலட்சியம் செய்கிறது

## திருமாவளவன் தெரிவிப்பு



பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.எம். கிருஷ்ணா ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கை முற்றிலும் தமிழினத்துக்கு எதிரானது என்று எதிர்ப்புத் தெரிவித்து விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் பேரவை தலைவரின் இருக்கைக்கு எதிரே சென்று அறிக்கையை கிழித்தெறிந்தார்.

இதனையடுத்து அ.தி.மு.க, தி.மு.க. உறுப்பினர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். இதையடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியதும் ஜனாதிபதி உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் திருமாவளவன் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது, குடியரசுத் தலைவரின் உரையில் ஈழத்தமிழர்கள் குறித்து ஒரே ஒரு வரிச்செய்தி மட்டுமே இடம் பெற்றுள்ளது. அங்கே ஒவ்வொரு நாளும் தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் அடக்கு முறைகளை ஏவி வருகின்றனர். தமிழர்களின் தாயகத்தை இலங்கை இராணுவம் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்து வருகிறது.

பாடசாலை, கல்லூரி மாணவிகள் பல்லாயிரக்கணக்கில் பாலியல் வல்லுறவுக்களாக்கப்பட்டு கர்ப்பமடைந்துள்ளனர் என்கிற தகவல்கள் நெஞ்சை பதற வைக்கின்றன. இத்தகைய அரசு பயங்கரவாதத்தில் இருந்தும், கலாசார சீரழிவிலிருந்தும் தமிழ் மக்களை இந்திய அரசு பாதுகாத்திட வேண்டும்.


இன்னொரு நாட்டின் விவகாரத்தில் இந்தியா தலையிடுவதில்லை என்று இந்திய அரசு தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால், தென்னாபிரிக்க நிறவெறி அரசுக்கு எதிராக இந்திய அரசு ஏற்கனவே உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பங்களாதேசத்தை உருவாக்கியுள்ளது. சீனாவுக்கு எதிராக தலாய்லாமாவுக்கு இந்தியாவில் அடைக்கலம் கொடுத்துள்ளது. பாலஸ்தீனர் களுக்கு ஆதரவாக இந்திய அரசு செயற்பட்டுள்ளது. ஆனால், ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் மட்டும் இன்னொரு நாட்டின் விவகாரத்தில் தலையிட முடியாது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

தமிழர்கள் என்றால் இந்திய அரசு தொடர்ந்து அலட்சியம் செய்து வருகிறது. முல்லைப் பெரியாறு அணை சிக்கல், காவிரி நீர் சிக்கல், பாலாற்று அணை சிக்கல், தமிழக மீனவர்கள் பிரச்சினை போன்ற அனைத்திலும் தமிழர்களுக்கு எதிராகவே இந்திய அரசு செயற்பட்டு வருகிறது. இதனை இந்திய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது.

தமிழினத்துக்கு எதிரான இந் திய அரசின் இத்தகைய போக்கை விடுதலை சிறுத்தைகளின் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன். இந் நிலையில் ஜெனீவா தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்காத நிலை எடுத்தாலோ அல்லது நடுநிலை வகித்தாலோ ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் தொடர்வது பற்றி மறுபரிசீலனை செய்ய நேரிடும் என்பதை தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார். (அ-2)

# மும்பை தாக்குதல் விசாரணை; பாக். நீதிக்குழு இந்தியா வந்தது



மும்பை தாக்குதல் தொடர்புடைய குற்றவாளிகள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்நாட்டு விசாரணை குழு இந்தியா வந்துள்ளது.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பயங்கரவாதிகள் அரபிக் கடல் வழியாக ஊடுருவி நடத்திய தாக்குதலில் 160 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 10 பயங்கரவாதிகளில் 9 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற பயங்கரவாதி மட்டும் பிடிபட்டான். அவனுக்கு மும்பை உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்த நிலையில் மும்பைத் தாக்குதல் சம்பவம் குறித்து ரமேஷ் மொகாலே என்பவரின் தலைமையிலான ஆர்.வி. சவாந்த், வாஹல் என எட்டு பேர் விசாரணைக்குழு நான்கு நாட்கள் பயணமாக நேற்று முன் தினம் இந்தியா வந்துள்ளார்.

இக்குழு மும்பை தாக்குதல் சம்பவத்திற்கு எதிராக முக்கிய ஆதாரங்களை திரட்டுகின்றனர். இன்று மும்பையில் இரு நாட்கள் முகாமிட்டு முக்கிய அதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்துகின்றனர்.

பின்னர் சுட்டுக்கொல்லப்பட்ட 9 பயங்கரவாதிகளின் பிரேத பரிசோதனை குறித்த ஆவணங்களையும் தற்போது உயிருடன் சிறையில் உள்ள அஜ்மல் கசாப்பின் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆதாரங்களையும் ஆய்வு செய்வர். (அ-2)

# கச்சதீவு அருகே மீனவர்கள் மீது பெற்றோல் குண்டுவீச்சு தாக்குதல்

## படகு கடலில் மூழ்கியது

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் மீது இலங்கை கடற்ப டையினர் அடிக்கடி தாக்குதல் நடத்தியும் மீனவர்களின் வலைகளை அறுத்து எறிந்தும் இங்கு மீன்பிடிக்க வரக்கூடாது என மிரட்டியும் வருகிறார்கள்.

இலங்கை கடற்படையினரின் அட்டூழியம் ஒரு பக்கம் செய்து கொண்டு இருக்கும் போது இல ங்கை மீனவர்களும் இராமேஸ்வரம் மீனவர்களை தாக்கி வருகிறார்கள்.

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது நேற்று முன்தினம் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தி உள்ளார்கள். இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க சென்றனர்.

கச்சதீவில் மீன்பிடித்து கொண்டிருந்த வேளையில் பிளாஸ்ரிக் படகில் வந்த இலங்கை மீனவர்கள் இங்கு ஏன் வந்தீர்கள் என்று கூறி அவர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசினர். இதில் படகு கடலில் முழ்கியது. கச்சதீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரும் தாக்குதல் நடத்தி மீன் வலைகளை கடலில் விசி அறுத்து எறிந்தனர். (அ-2)

# இலங்கை விவகாரம்; கோவையில் பெரியார் திராவிடர் கழகம் போராட்டம்

## சோனியாவின் உருவப் படத்திற்கு செருப்படி



இலங்கையில் ஈழத்தமிழர்கள் மீது இலங்கை நடத்திய போர்க்குற்றங்கள் குறித்து அமெரிக்கா இலங்கை அரசு மீது போர்க்குற்றம் செய்ததாக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து ஐ.நா. சபையில் உள்ள அனைத்து நாடுகளின் ஆமோதிப்பை கேட்டது.

இதற்கு பல்வேறு நாடுகளும் இலங்கை அரசு போர்க்குற்றம் செய்திருக்கிறது என்று தங்களுடைய ஆமோதிப்பை தெரிவித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இந்திய அரசு அமெரிக்கா கொடுத்திருக்கின்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருந்து அனைத்துக் கட்சியினரின் குரல்களும் நாடாளு மன்றத்தில் எம்.பிக்களின் மூலமாக வலியுறுதப்பட்டிருக்கின்றன.

ஆனால், ஆளும் மன்மோகன்சிங் அரசு அவர்களின் குரல்களுக்கு செவிசாய்க்காமல் இருப்பதால் இந்தியா இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களிக்கும் என்ற செய்திக்ள கசிந்து கொண்டிருந்தன.

இதைக் கேட்டு கோபமடைந்த கோவை பெரியா திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் திரண்ட தோழர்கள் காந்திரபுரத்தில் உள்ள பெரியார் சிலை முன்பு சோனியாகாந்தியின் உருவப்படத்தை செருப்பால் அடித்தும் தீயிலிட்டும் கொளுத்தினார்கள்.

திடீரென்று நடந்த இந்த சம்பவத்தால் பதற்றத்துக்குள்ளான கோவை மாநகர பொலிஸார் அவர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட போது இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தால் தமிழகத்திற்கு வரும் காங்கிரசுக்கு தொடர்ந்து கறுப்புக் கொடி காட்டி போராட்டம் செய்வோம் என்று தெரிவித்தார் கு.இராமகிருஷ்ணன். (அ-2)


# இந்திய வெளிவிவகார அமைச்சரின் உரைக்கு இலங்கை நன்றி தெரிவிப்பு

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படுகின்ற எந்தவொரு தீர்மானத்தையும் எதிர்கொள்ன அரசாங்கம் தயாராக உள்ளதென பதில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிக்கின்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அமைச்சர் இந்தக் கருத்தினை கூறினார். இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆற்றிய உரை தொடர்பிலும் பதில் அமைச்சரவை பேச்சாளர் இதன் போது கருத்து தெரிவித்தார்.

இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆற்றிய உரை தொடர்பில் அரசாங்கம் நன்றிகளை தெரிவிப்பதாகவும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணையை தோற்கடிப்பதற்கான அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் இலங்கையில் இருந்து விசேட பிரதிநிதி குழுக்கள் சிலவற்றை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளதாக பதில் அமைச்சரவை பேச்சாளர் கூறினார். (அ-7)



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் யோஷிரோ மோரி டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துக் கலந்துரையாடு வதைப் படத்தில் காணலாம்.

பேச்சு அதிகம் வேண்டாம். அனைத்திற்கும் சுருக்கமான பதில்; உங்கள் காரியங்களைச் செய்து முடிப்பதுதான்! - ஜார்ஜ் ஹெர்பெர்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இலங்கையின் உறக்கம் கலைக்கும் அமெரிக்க எச்சரிக்கை

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக் கூறாவிட்டால் இலங்கையில் மீண்டும் போர் உருவாகக்கூடிய ஆபத்து இருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்கா விடுத்த இந்த எச்சரிக்கையை எவரும் சாதாரணமாகக் கருதிவிட முடியாது.

இலங்கை அரசிற்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் கொண்டு வருகின்ற அமெரிக்கா, வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் மிகத் தெளிவாக உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறும்; நிறைவேறாது என்ற வாதப் பிரதிவாதங்கள் நிலவுகின்ற இவ்வேளையில், அரசு பொறுப்புக் கூறத் தவறினால் இலங்கையில் மீண்டும் போர் வெடிக்கும் என்று கூறப்பட்ட கருத்தில் இலங்கை அரசு ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதென்பது தெளிவாகின்றது.

விடுதலைப்புலிகளைமுற்றாகஒழித்துவிட்டோம். 30 ஆண்டு காலப் பயங்கரவாதத்தை ஒழித்த எங்களை போர்க் குற்றவாளிகளாகக் காட்டுவதற்கு மேற்குலகம் திட்டமிட்டுள்ளதென்ற அரசின் குற்றச்சாட்டுக்களின் மத்தியில்,

பொறுப்புக் கூறத் தவறினால், இலங்கையில் மீண்டும் போர் வெடிக்கும் என நிறுத்திட்டமாக அமெரிக்கா எச்சரிக்கை செய்திருப்பதானது இலங்கை அரசின் உறக்கத்தை கலைப்பதாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகக் கூறி அதனைத் தடை செய்த நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று.

பல சந்தர்ப்பங்களில் விடுதலைப்புலிகளை அமெரிக்கா கண்டித்ததும் உண்டு.

இவ்வாறாக இருந்த நிலைமையை அமெரிக்கா இப்போது மாற்றி அமைத்துவிட்டது.

வன்னிப் போருக்குப் பின்பு இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை மட்டுமன்றி உலக நாடுகளையும் ஏமாற்ற முற்பட்டதே இதற்கு காரணமாகும்.

போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என இலங்கை அரசு கூறி வந்த போதிலும் அதனை நிறைவேற்றுவது பற்றி அரசு இம்மியும் சிந்திக்கவில்லை.

மாறாக இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது என கோஷம் இடவும் அரசு தலைப்பட்டது.

இவ்விடத்தில்தான் இலங்கை அரசு தமிழினத்திற்கு எதிராக திட்டமிட்டு செயற்படுகிறது எனும் உண்மையை மேற்குலகம் உணர்ந்து கொண்டது.

ஆக ;பொறுப்புக்கூறுவதில் இருந்து இலங்கை அரசு விலகுமாக இருந்தால் இலங்கையில் போர் வெடிக்கும் என்ற அமெரிக்காவின் எச்சரிக்கையில் இருக்கக்கூடிய நிஜங்களுக்கு பலவாறாக பொருள் கொள்ள முடியும்.

எதற்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

### இலங்கைக்கு எதிரான தீர்மானம்

# இந்தியா ஆதரிக்கத் தவறினால் மத்திய அரசுக்கான ஆதரவு வாபஸ்

## கருணாநிதி ஆவேசம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்காவிடின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலிருந்து விலகுவது தொடர்பாக செயற்குழுவைக்கூட்டி முடிபெடுப்போம் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்கா விட் டால் அது தமிழ் இனத்திற்குச் செய்யும் துரோகமாகவே அமையும் என்றும் எச்சரித்துள்ளார். இது குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் உச்சகட்டப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தான் ஆற்றவேண்டிய கடமையிலிருந்து முழுமையாக தவறிவிட்டது தி.மு.க என்ற குற்றச்சாட்டு இந்த நிமிடம் வரை வலுவாகவேயுள்ளது. இந்த நிலையில் தற்போது அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க. உர த்த குரல் எழுப்பி வருகிறது.

நாடாளுமன்றத்தில் தி.மு.க உள்ளிட்ட தமிழக எம்.பி.க்கள் தொடர்ந்தும் போர்க்கொடி உயர்த்தி வருகின்றனர்.

ஆனால் இலங்கைக்கு எதிராக செயற்படமாட்டோம். நட்பு உள்ளது. வரலாற்று ரீதியான உறவு உள்ளது. அது பாதிக்கப்படக்கூடாது என்று இந்திய மத்திய அரசு தெரிவித்து விட்டது.

இந்தநிலையில் நாங்கள் மத்திய அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறுவது குறித்தோ அல்லது அமைச்சர் பதவிகளை ராஜினாமா செய்வது குறித்தோ நான் மட்டும் முடிபு செய்ய முடியாது. எங்களது செயற்குழு கூடித்தான் முடிபெடுக்கும்.

இருப்பினும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்காவிட்டால் அது தமிழ் இனத்திற்கு இந்தியா செய்த துரோகமாகவே தி.மு.க. கருதும். எங்களது கோரிக்கை நிறை வேற்றப்படாவிட்டால் தீர்க்கமானதொரு முடிபை எடுப்போம் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (அ-7)

## துண்டுப்பிரசுர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நுகர்வோர் தினத்தை முன்னிட்டு நேற்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பாவனையாளர்களின் சக்தியினை வெளிப்படுத்தல், வியாபார சந்தையினை ஒழுங்குபடுத்தல் மற்றும் போட்டி நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மூலம் பாவனையாளர்களின் உரிமையி னைப் பாதுகாத்தல் என்னும் கருப்பொருளில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு மற்றும் அத்தோடு இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்நாட்டு வியாபார அமைச்சின் கீழ் இயங்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டதிட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த துண்டுப் பிரசுரங்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## இளங்கலைஞர் மன்றத்தின் முதலாம் நாள் இசைவிழா

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசைவிழா இன்று வெள்ளிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வரை 3 நாட்கள் நடைபெறவுள்ளது. இதில் முதலாம் நாள் நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்போது திருமுறைக் கச்சேரியில் பாட்டு எஸ்.நித்தியானந்தன், வயலின் கே. பத்மநாதன்,மிருதங்கம் என். சதீஸ்குமார், கடம் எஸ்.சிவசிவா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் குழு இசையில் வயலின் திருமதி கிருஷ்ணாலினி அகிலன்,மிருதங்கம் எஸ்.ரவிவர்மன், கெஞ்சிரா ரி.தனுசன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மிருதங்க வகுப்பு மாணவர்களின் தாள வாத்தியக் கச்சேரி நடைபெறும். கீதவாஹினி இசைக் கல்லூரி மாணவிகளின் குழு இசை நிகழ்வில் வயலின் திருமதி கிருஷாலினி அகிலன், மிருதங்ம் ரி.துவாரகன், மோர்சிங் மோகனதர்சன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் கெஞ்சிற் கச்சேரியில் நாதஸ்வரம் ஆர்.வசந்தன், கீபோட் கே.மயூரன், மிருதங்கம் கே.கண்ணதாசன், கடம் எஸ்.சிவசிவா ஆகியோர் அணி செய் கலைஞர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதி நிகழ்வாக இடம்பெறும் நடன நிகழ்ச்சியில் பதம், கீதோபதேசம் இடம்பெறவுள்ளது. இதற்கு அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கம் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், மிருதங்கம் கே.கண்ணதாசன், ஜெண்டை ஏ.செல்வரத்தினம், பாட்டு கலாநிதி ஸ்ரீதர்சனன், வயலின் கே.பத்மநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-7)




உலகப் பொருட்கள் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் கடவுள். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். கடவுளை நினைந்து செய்யும் காரியம் யாவும் நிறைவேறும். உலகியல் வாழ்க்கையில் கடவுளை முன்னிறுத்தி எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்பது எல்லோரும் அறிந்தவிடயம். ஆனால் கடவுளை நேரில் அழைத்துப் பேசியவர் சிலரே. சமயகுரவர் அவ்வாறு பேசியதற்கு அவர்களுடைய பாடல்களே சான்றாகவுள்ளன. மணிவாசகருடைய பாடல் ஒன்று கடவுளை அழைத்துப் பாடப்பட்டுள்ளது.

பாடலின்தொடக்கம்'கடவுளேபோற்றி' என அமைந்துள்ளது. மந்திரியாக வாழ்ந்த மணிவாசகர் உலக வாழ்க்கையை விடுத்துக்கடவுளோடு இணைய விரும்புகிறார். கடவுள் பதிஞானத்தாலன்றிப் பசு பாசஞானங்களால் அறியப் படாதவரென தத்துவ ஞானிகள் விளக்கஞ் செய்துள்ளனர். ஆனால் அத்தகைய தத்துவநிலையில் நின்று கடவுளை அழைக்கவில்லை. குருவாகி வந்த இறைவனைப் பிரிந்தபோது மணிவாசகர் தான் ஒரு சாதாரண மனிதர் என்பதை நன்குணர்கிறார். எனவே மனித நிலையில் நின்று கடவுளோடு பேசுகின்றார்.

''கடவுளே நீ என்னைக் கண்டு கொண்டு அருள்செய்யவேண்டும். உன்னுடைய திருவருள் நோக்கு என் மீது படவேண்டும். இந்த உலகப் பற்றிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும். அதற்காக உலகப் பற்றினால் இறுகிக் கிடக்கும் என் உள்ளத்தை அன்பால் உருகச்செய்து என்னை ஆட்கொள்ளவேண்டும். உன்னை அதற்காகவே நான் வணங்குகின்றேன். உலக இன்பத்தையே நாடும் என் உடம்பினை விரைவாக நீக்கியருள் செய். மேலான வீட்டின்பை எனக்கு நீ தந்தருளவேண்டும். உன்னை நான் அதற்காக மீண்டும் வணங்குகின்றேன். திருச்சடையிலே கங்கையை வைத்திருக்கின்ற சங்கரனே உன்னை வணங்குகின்றேன்''

இறைவன் சடையுளே கங்கையை அடக்கியதற்கான காரணம் உலகத்தைக் காப்பதற்காகவே. எனவே மணிவாசகர் அந்த அருளை நினைந்து வணங்கும்போது இறைவன் சடையிலே உள்ள கங்கையை நினைத்துப் பார்க்கிறார். இயற்கைச் சக்திகளின் ஆற்றலை அடக்கும் வல்லமை இறைவனுக்கு மட்டுமேயுண்டு. 'சங்கரன்' என்றால் 'சுகத்தைச்செய்பவன்' என்று பொருள். பொங்கும் புனற்கங்கையின் ஆற்றலை அடக்கிய கடவுளிடம் தன்நிலையை உள்ளவாறு எடுத்துரைப்பதே நல்லதென மணிவாசகர் எண்ணிப்பாடுகிறார்.

உடலைக் களைந்திட இறையருள் தேவை என்பதை மணிவாசகர் உறுதியாக நம்புகிறார். நமது பிறப்பும் இறப்பும் இறைவன் சித்தம் என்பதை நாம் இப்போது ஏற்றுக்கொள்வதில்லை.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஆனால் அது இறைவன் சித்தப்படியே நடக்கிறது என்ற தெளிவை மணிவாசகர் ஊட்டமுயல்கிறார். அதனால் ''உடலிது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருளு'' என விண்ணப்பிக்கிறார். 'ஒல்லை' என்ற சொல் விரைவைக் குறிப்பதாகும்.

மிக விரைவாக இந்த உடலைவிட்டு இறைவனிடம் இணைந்துவிட வேண்டுமென ஆதங்கப்படுகிறார். உலக இன்பங்களாகிய நாடி நிற்கும் உடலை விட்டொழிக்கவேண்டும் என்ற எண்ணம் மனிதநிலையில் ஏற்படுவது அரிது. எல்லோரும் இவ்வுலகிலே பல்லாண்டு வாழவேவிரும்புவர். அவர்களைக் கடவுளிடம் போகவைக்கிறார் மணிவாசகர்.

''கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண்டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
ஆண்டிடவேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளுபோற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி''

# ஜப்பானில் மீண்டும் சுனாமி; 6.9 ரிக்டரில்
# அணு உலைகளை திறக்குமா ஜப்பான்?



(டோக்கியோ)

ஜப்பானின் வடகிழக்குக் கடலோரப் பகுதியை சிறிய அளவிலான சுனாமி கடந்த புதன்கிழமை மாலை 6.40 மணியளவில் தாக்கியது.

பசுபிக் பெருங்கடலிலுள்ள ஹொக்கைடோதீவுக்கு அருகில் 6.9 ரிக்டர் அளவுக்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து சுனாமி ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடலின் தரைப்பரப்பிலிருந்து சுமார் 26.6 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கடலோரப் பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. சுனாமி அலைகள் கடற்கரையை நெருங்குவதற்கு முன்பாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடும்படி கடலோரத்தில் வசிப்பவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

சுமார் 50 சென்ரிமீற்றர் உயரம் கொண்ட பேரலைகள் தாக்கக் கூடும் என்று முதலில் எச்சரிக்கப்பட்டிருந்தது. ஆனால் 20 சென்ரி மீற்றர் உயரத்துக்கே அலைகள் எழுந்தன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து வந்த சுனாமி ஆகியவற்றால் கடும் பாதிப்புக்குள்ளான ஹொக்கைடோ, அமோரி மாகாணங்களை இந்த முறையும் சுனாமி தாக்கியது.

ஓராண்டுக்குப் பின்னர் பல்வேறு எதிர்ப்புக்களையும் மீறி அணு உலைகள் மீண்டும் திறக்கலாம் என்று அரசு திட்டமிட்டிருக்கும் நிலையில் அதே மார்ச் மாதத்தில் மீண்டும் சுனாமி ஏற்பட்டிருக்கிறது.

இப்போதைய சுனாமியால் அணு உலைகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அணுமின் நிலையங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் கதிர் வீச்சின் அளவில் மாற்றம் ஏதுமில்லை என்று அணுமின் நிலையங்களை நிர்வகிக்கும் டொகோகு மின் நிறுவன செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை ஹொக்கைடோ தீவுக்கருகில் அதேதினத்தில் 6.1 அளவில் மற்றொரு நிலநடுக்கம் உணரப்பட்டிருக்கிறது. சுனாமி எச்சரிக்கை எதுவுமில்லை. (அ-2)

# வறுமையை ஒழிக்க
# உலகவங்கி நிதியுதவி

(வோஷிங்டன்)

இந்தியாவில் வறுமையை ஒழிக்கும் பொருட்டு உலகவங்கி 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது. புதிய வழிமுறைகள் மற்றும் இலகுவான நிதி மேலாண்மை உள்ளிட்டவைகளின் உதவியுடன் இந்தியாவில் இருந்து வறுமைய ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு உலக வங்கி எப்போதும் ஆதரவாக இருக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## உலக தரிசனம்

# அமெ. வாழ் இந்தியருக்கு
# புதிய இணையத்தளம்

## நட்பு ரீதியான சேவையாகும்

அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கு சிறந்த மற்றும் நட்புறவு ரீதியான சேவைகளை வழங்கும் பொருட்டு சான்பிரான்சிஸ்கோவில் இயங்கி வரும் இந்திய தூதரகம், புதிய இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பாக பத்திரிகையாளர்களை சந்தித்த சான்பிரான்சிஸ்கோ இந்திய தூதரக உயர் அதிகாரி பார்த்தசாரதி கூறியதாவது,

அமெரிக்காவாழ் இந்தியர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய இணையத்தளத்தில் அவர்கள் விரும்பும் அனைத்து தகவல் களும் இடம் பெற்றுள்ளதாக அவர் கூறினார். அமெரிக்காவின் அலாஸ்கா, அரிசோனா , கலிபோர்னியா, குவாம் , ஹவாய் , மோன்டானா, நெப்ரஸ்கா, நெவோடா, நியூ மெக்சிக்கோ, ஓரிகான், உடா, வோஷிங்டன் மற்றும் யோமிங் பகுதிகளில் வாழும் அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்கான சேவை களை சான்பிரான் சிஸ்கோ இந்திய தூதரகம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)



ஆப்கானிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சர் தோமஸ் டி மெய்செயர் (இடது) தலைநகர் காபூலில் இராணுவ மரியாதையுடன் வரவேற்றார். ஆப்கான் இராணுவ அமைச்சர் அப்துல் ரஹீம் வார்டாக் (வலது) ஆகியோர் வருவதைப் படத்தில் காணலாம்.

# வங்கதேசத்தில் 2 படகுகள் நேருக்குநேர்
# மோதிக் கவிழ்ந்ததில் 110 பேர் உயிரிழப்பு



வங்கதேசத்தில் இரு படகுகள் நேருக்கு நேர் மோதி கொண்ட விபத்தில் இதுவரை பலியான நபர்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வங்கதேசத்தின் புறநகர்பகுதியான முன்ஷிகஞ்ச் பகுதியில் மேக்னா ஆற்றில் இந்த விபத்து நிகழ்ந்தது. பயணிகள் படகு நேருக்கு நேர் எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பலின் மீது மோதியது.

மேற்கு ஷரியத்பூரிலிருந்து இரண்டு அடுக்குகளைக் கொண்ட எம்.வி. ஷரியத்பூர் 1 எனும் இந்த படகு டாக்காவிலுள்ள சதார்கட் முனையத்துக்கு வந்து கொண்டிருந்தது.

கடந்த 13 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் விபத்து நிகழ்ந்ததாக சம்பவ இடத்துக்கு அருகிலிருந்தவர்கள் தெரிவித்தனர். நீரில் தத்தளித்த சிலரைக் காப்பாற்றியதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.


தீயணைப்பு வீரர்களும் மீட்புக் குழுவினரோடு சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் துணை இராணுவத்தினரும் கடலோரக் காவல் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான பயணிகள் கப்பல் ஆற்றில் நடுவில் 70 அடிக்கு கீழே மூழ்கிவிட்டதாக மீட்பு குழுவினர் தெரிவித்தனர்.

இதில் 30 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தங்களது பெற்றோருடன் பயணம் செய்ததாக தெரிகின்றது. இதில் 30 பேர் பத்திரமாக மீட் கப்பட்டுள்ளனர். மற்றவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெறுகின்றது. (அ-2)

# கொங்கோ கிளர்ச்சிக்குழுவின் தலைவர்
# தாமஸ் லுபாங்கா போர்க்குற்றவாளி

## சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு



கொங்கோ கிளர்ச்சிக்குழுவின் தலைவரான தாமஸ் லுபாங்கா போர் குற்றங்கள் புரிந்தார் என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் அரசுக்கு எதிராக யூபிசி மற்றும் எஸ்சி கிளர்ச்சி அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புக்கள் 15 வயதுக்கு கீழேயுள்ள சிறார்களை படைகளில் சேர்த்து வன்முறையில் ஈடுபட வலியுறுத்திய காரணத்திற்காக குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இவ்வழக்கிற்கு தற்போது தான் தீர்ப்பு வந்துள்ளது.


நீதிபதி அட்ரியன் ஃபுல்போர்ட் 15 வயதுக்கு கீழேயுள்ள சிறார் போராளிகளாக பயன்படுத்திய குற்றச்சாட்டிற்காக அமைப்பின் தலைவர் தாமஸ் லுபாங்கா போர்க்குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கினார்.

மேலும் நீதிபதி கூறியதாவது,

யூபிசி மற்றும் எவ்பிஎல்சி ஆகிய அமைப்புக்கள் 15 வயதுக்கு கீழேயுள்ள சிறார்களை படைகளில் சேர்த்தார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த நீதிமன்றம் உறுதி அளிக்கின்றது.

அப்படி சேர்க்கப்பட்டவர்கள் யுத்தம் உட்பட பல மோதல்களில் தீவிரமாக பங்கேற்க வைக்கப்பட்டார்கள். குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்த சிறார்கள் படை வீரர்களாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லுபாங்கா உட்பட மூத்த அதிகாரிகளுக்கு பாதுகாவலர்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்தார் என்றும் அதன் அரசியல் தலைவராகவும் இருந்தார் என்பதும் உறுதியாகின்றது. (அ-2)

# சுவிஸில் சுற்றுலாப்பேருந்து விபத்து;
# 22 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழப்பு



சுவிட்சர்லாந்தில் பாடசாலைக் குழந்தைகளை சுற்றுலா அழைத்துச் சென்ற பேருந்து விபத்திற்குள்ளானதில் 22 குழந்தைகள் உட்பட 28 பேர் பலியாயினர். சுவிட்சர்லாந்தின் வயலாஸ் மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 53 இற்கும் மேற்பட்டோர் விடுமுறையை கொண்டாட பேருந்து ஒன்றில் சுற்றுலா சென்றனர். அவர்கள் வால் அனிவெர்ஸ் எனும் சுற்றுலாத் தளத்தை பார்த்துவிட்டு பெல்ஜியம் நோக்கி திரும்பி கொண்டிருந்தனர்.

சையீரி நகர் அருகே வந்து கொண்டிருந்த போது மலைப்பகுதி கணவாய் வழியின் பக்கவாட்டுசுவரில் எதிர்பாராத விதமாக மோதி விபத்துக்குள்ளானது. இதில் 22 குழந்தைகள் உட்பட 28 பேர் உடல்நசுங்கி பலியாயினர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வயலாஸ்கன்டோன் மென்ட் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

ஆசிய கிண்ண கிரிக்கெட்

# 3-வது போட்டியில் இலங்கையை வீழ்த்தி இறுதிப் போட்டியை உறுதிப்படுத்தியது பாக்.

Micromax asia cup 2012

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இலங்கை அணியை பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் தோற்கடித்துள்ளது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி டாக்காவில் நடைபெற்று வருகிறது.



முதலில் நடந்த 2 லீக் ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்களால் பங்களாதேஷையும், இந்தியா 50 ஓட்டங்களால் இலங்கையையும் தோற்கடித்திருந்தன.

இந்நிலையில் நேற்றைய மூன்றாவது லீக் ஆட்டத்தில் இலங்கை -பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி,முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அதனடிப்படையில், டில்சானும் ஜெயவர்த்தனவும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கி நிதானமான ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

6-வது ஓவரில் ஜெயவர்த்தன 12 ஓட்டங்களில் சீமாவின் பந்துவீச்சில் ஹபீஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழதார்.

அடுத்து வந்த சங்கக்கார, டில்சானுடன் இணைந்து அதிரடி காட்டினார்.

8ஆவது ஓவரில் டில்சானும் 20 ஓட்டங்களை அடித்திருந்த போது சீமா பந்துவீச்சில் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த சண்டிமால் ஓட்டமேதும் பெறாமல் வெளியேற அதைத் தொடர்ந்து வந்த திரிமானே சங்கக்காரவுடன் இணைந்து ஆடினார்.

குமார் சங்கக்கார 92 பந்துகளுக்கு முகங்கொடுத்து 71 ஓட்டங்களை (ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் உட்பட) எடுத்து ஆட்டமிழந்தார்.

உபுல் தரங்க 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.


ஆனால் இலங்கை அணியின் 5 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடனும், இருவர் ஓட்டமேதும் பெறா மலும் ஆட்டமிழந்தமை இலங்கையின் வீழ்ச்சிக்கு காரணமாகியது.

முடிபில், பாகிஸ்தான் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இலங்கை அணி 189 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் அய்ஸாஸ் சீமா 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், சஜீட் அஜ்மல் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் உமர்குல் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 12.3 ஓவர்களில் 33 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 3ஆவது விக்கெட்டையும் இழந்து நெருக்கடிக்குள்ளாது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கும் உமர் அக்மலும் தமது இணைப்பாட்டத்தில் 152 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தான் அணியைப் பலப்படுத்தினர்.



உமர் அக்மல் 77 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹமாம் அஸாம் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களைப் பெற பாகிஸ்தான் அணி 39.5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

அய்ஸாஸ் சீமா இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

## இந்தியா-பங்களாதேஷ் இன்று மோதல்

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் 4-வது லீக் ஆட்டத்தில் இன்று இந்தியா-பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி பங்களாதேஷை வீழ்த்துவதன் மூலம் இந்திய அணி இறுதிப் போட்டி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொள்ளும்.

பங்களாதேஷ் வென்று இறுதிப்போட்டிக்கு நுழைய போராடும்.

இன்றைய ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது.

## சனல் 4 நேற்று வெளியிட்ட...

சனல் 4 இன் இலங்கையின் கொலைக் களங்கள் காணொளி நேற்று வெளியாகியுள்ள நிலையில் இலங்கை மீதான சர்வதேசத்தின் நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன.

இலங்கை தனது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணை செய்து குற்றமிழைத்தவர் களுக்கு தண்டனை வழங்காவிடில், அனைத்துலகுக்கும் பொதுவான அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை மீது ஏனைய நாடுகள் நடவடிக்கை எடுக்க முடியும் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பிராந்திய இயக்குனர் சரீபி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முக்கிய, மூத்த அதிகாரிகளுக்கு எதிரான பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளன. இவ்வழக்குகள் தொடரும் பட்சத்தில் குறிப்பிட்ட மூத்த அதிகாரிகளின் எஞ்சிய வாழ்வு முழுமைக்கும் பெரும் தலையிடியாக இருக்கும் என நான் நினைக்கின்றேன் என சரீபி மேலும் தெரிவித்தார்.

சனல் 4 வெளியிட்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் தெரிவிக்கையில்,

ஜனநாயக அரசாங்கம் ஒன்று யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதினை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் இரு தரப்பினரும் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கம் என்ன விலை கொடுத்தாவது யுத்தத்தை வெல்ல வேண்டும் எனக் கருதியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கமானது இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை (சனல் 4) தட்டிக்கழித்து வருவதுடன் அவை போலியானவை எனவும் கூறி வருகின்றது.

இவை சிறந்த ஜனநாயகத்திற்குரிய பண்புகள் அல்ல என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் யுலேற்றா டீறிவேரோ எச்சரித்துள்ளார்.

போர்க் குற்றம் தொடர்பாக பொறுப்புக் கூறும் விடயத்தில் இலங்கைக்கு மனித உரிமைப் பேரவை நெருக்கடிகளைத் தரக் தொடங்கிவிட்டது.

இதனால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தனக்கு ஏராளமான நண்பர்களை சம்பாதித்துக் கொள்ள இலங்கையால் முடியாது என இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேடான இந்து தனது கருத்தை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என சர்வதேச ஜூரிகள் பேரவையின் நிரந்தரப் பிரதிநிதி அலெக்ஸ் கென்டி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நியமனங்களிற்கு ஏற்ற வகையில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதாகவும், வெறும் வார்த்தைகளுக்குள் மட்டும் மனித உரிமைகளைப் பாதுகாக்க முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (ந-8)

## ரணில் இன்று...

சிங்கவுடன் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, எம்.பி.க்களான ஜயலத் ஜயவர்த்தன, டி.எம்.சுவாமிநாதன் உட்பட பலரும் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இன்று காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து மாலை யாழ்ப்பாணம் வருவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8;11)

## இலங்கைக்...

ஏற்கெனவே ஜெனிவாவை சென்றடைந்துள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை குறித்து மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது இலங்கை பிரதி நிதிகள் விரிவான தெரிவுப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். (ந-8,11)

## இலங்கை அரசின் போர்க்...

இப் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய இராணுவ உயர்பீடத்திடம் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் சனல் 4 வலியுறுத்தியுள்ளது.

இவ் ஆவணப் படம் நேற்று அதிகாலை 5.55 மணிக்கு சனல் 4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இராணுவம் சுட்டுக்கொன்றதற்கான ஆதாரங்களை சனல் 4 விரிவாக விளக்கியுள்ளது.

ஆனாலும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து ஏற்கெனவே வெளியான காணொளி பதிவுகளையே வெளியிட்டது.

மேலும், பாதுகாப்பான பகுதிகள் என அறிவிக்கப்பட்ட-பொது மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளிலும் வைத்தியசாலைகள் மீதும் பாரிய கனரக ஆயுதங்கள் மூலம் குண்டுகளை வீசியமை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான மருந்து மற்றும் உணவுப்பொருட்களை வழங்காது தடுத்தமை, வன்னியில் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், மக்களை கொத்துக் கொத்தாக கொன்று குவித்தது உட்பட பல்வேறு போர்க் குற்றங்களையும் சனல் 4 காணொளி அம்பலப்படுத்தியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி இதற்கு முன்னர் வெளியிட்ட போர்க் குற்ற காணொளிகளை பொய் எனக் கூறிய இலங்கை அரசு, தற்போது வெளியாகியுள்ள புதிய ஆவணப் படத்தையும் நிராகரித்துள்ளது.

எனினும் சனல் 4 தொலைக் காட்சியில் நேரடிக்கருத்துக்களை வழங்கிய அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும் பிரதிநிதிகளும், பிரபல குற்றவியல் தடய நிபுணரும் இப் போர்க் குற்றங்கள் குறித்த பின்னணிகளையும் இதை மறைப்பதற்கு இலங்கை மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் விளக்கினர்.

சனல் 4 வெளியிட்டுள்ள இலங்கையின் கொலைக்களங்கள்-தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள் காணொளியின் ஊடாக போர்க் குற்றச்சாட்டுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆவணப் படத்தின் இறுதியில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பிலான ஆதாரங்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இப்போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி அம்மக்களுக்கு கிடைக்குமா? என்ற கேள்வியை ஜோன் ஸ்னோ சர்வதேச சமூகத்தின் மீது முன்வைத்துள்ளார். (ந-8,11)

## அமெரிக்கா...

அமைச்சர் விமல் வீரவன்ச விடுத்துள்ள கோரிக்கை தொடர்பான செய்திகளுக்கு அமெரிக்க ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அதேவேளை ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்மறையாக பிரதிபலிக்கும் அரசாங்கம் அதை எதிர்த்து கடுமையாகப் போரிடுவதாக ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலின் டோனஹே ஏ.பி.நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஏற்கெனவே அமெரிக்க எதிர்ப்பு அணியில் உள்ள சீனா, ரஷ்யா, கியூபா, வெனிசுவெலா, லிபியா, ஈரான் மற்றும் சிரியா போன்ற நாடுகளுடன் கடந்த பல ஆண்டுகளாகக் கொண்டுள்ள உறவுகள் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருந்ததாகவும் இந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-8,11)

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டனம் அறவிடப்படமாட்டாது.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பி DHL

நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு,வெளிநாடுகளுக்கான DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள (Door to door Service)
அழையுங்கள் 021 222 7835, 0719554528

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
கனடா - 1 kg - 500/=
சுவிஸ் - 1 kg - 400/=

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

**திருமுருகன் கொம் நெற்**
TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.



## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

எமது இயக்குநர் சபையின் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி விசா ஆலோசனையானது நேற்று 15.03.2012 முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

- எவரும் இலவச சட்ட ஆலோசனை பெறலாம். ஆனால் நாள் ஒன்றிற்கு 5 பேருக்கு மட்டுமே. முன் பதிவின் அடிப்படையில் ஆலோசனையளிக்கப்படும்.
- விசேட ஆலோசனை.

செயற்றிடத்தில் பின்வருவோர் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

- கல்வியாளர்கள்
- பட்டதாரிகள்
- விரிவுரையாளர்கள்
- வைத்தியர்கள்,எந்திரிகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து மூளைசாலிகள் வெளியேற்றம் தூரநோக்கில் சமூகத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(சி-6095)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0212219016
115, A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. தொலைபேசி : 0212285544
23, 1/3 மகேஸ்வரி லேன், கொழும்பு -06. தொலைபேசி : 0112366925
மெல்பேர்ன் ஆஸ்திரேலியா Land Line : 0061390437100



ஆரம்பத்திலிருந்து......
A/L - 2013
**LOGIC**
எஸ்.எஸ். மனோகரன்

- M.C.Q வினா விடைகள்
- குறும் வினா விடைகள்
- கட்டுரை வினா விடைகள்

வழங்கப்படும்
(7712)
ஆரம்பம் : 17.03.2012 - 9 மணி

**BEACON**
யாழ் நகர்
(வெலிங்டன் சந்தியடி)



**G.A.Q. & B.A.**

யாழ்ப்பாணம்
Batch : 2012 & 2013
ஆரம்பம் : 17.03.2012

பேராதனை
Batch : 2012 & 2013
நடைபெறுகின்றது

**தமிழ்**
சிவலிங்கராஜா
(இளைப்பாறிய தமிழ்த்துறைப் பேராசிரியர்)
T. ஜீவானந்தன் (B.A.Hons)

**பொருளியல்**
வரதராஜன்
(முன்னாள் விரிவுரையாளர்)

**மெய்யியல்**
S.S. மனோகரன்

**வரலாறு**
S.K. கமலநாதன்
(MA Hist)
விக்கி
(BA Hist Hons)

**அரசியல்**
சுகாஸ்
(L.L.B)
M. அசோக்
(B.A Hons)
P.G.D.E

**இந்துநாகரிகம்**
கே.எஸ். ரமணன் (B.A. Hons)

**BEACON**
(பட்டப்படிப்புகள் பிரிவு)
(வெலிங்டன் சந்தி)



O/L ? நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம். International Passport- in Education
Pass / Fail → CIMA-UK 50% off Course fee | Software Engineering | BIT University of Colombo Sem 1,2,4,6 & Project | Multimedia Adobe
SMS your name & course to 772395895 & Get Schol.
USA, UK, பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 17.03.2012
Government Scholarship.
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில், 324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Diploma courses..


# மரண அறிவித்தல்



## திருமதி லலிதா சண்முகலிங்கம்

**(ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)**

அரியாலையூர் திருமதி லலிதா சண்முகலிங்கம் 14.03.2012 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் V.K. சண்முகலிங்கம் (யாழ்.மாவட்ட முன்னாள் கிறிக்கற் பயிற்றுனர்/ புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லூர் கோயில் கந்தையா இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், அகிலன் (பழைய மாணவன் யாழ்/ சென். பற்றிக்ஸ் கல்லூரி), விமலன் (பழைய மாணவன் யாழ்/ சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிரோஜனாவின் அன்பு மாமியாரும், பத்மினி இரட்ணலிங்கம், இரவிந்திரன் பேரம்பலம், விஜயா புஸ்பநாதன், இராஜினி சண்முகநாதன், ஜெயகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசமணி சின்னத்துரை, கனகம்மா ஆறுமுகம், கனகேஸ்வரி சுப்பிரமணியம், இராஜ இராஜேஸ்வரி நல்லையா, சற்குணவதி குணரட்ணம், அரசரட்ணம் மற்றும் ஜெயக்குமார் மல்லிகா, சாந்தகுமார் சகுந்தலா தேவி ஆகியோரின் மைத்துனியும் மற்றும் அரசரட்ணம் சசிவதனியின் உடன்பிறவாச் சகோதரியும் சாரங்கன், கிறிஷாகரன், கௌரிசங்கர், சுஜித்தா, நிரோஷாந், டிலக்ஷன், பவித்திரன், கார்த்திகா ஆகியோரின் பெரிய தாயாரும் இஷானி, சிவானி, அஸ்வின், ஹரிசாந்தன், அமரர்கள் ரவீந்திரன், மோகனாம்பிகை மற்றும் பத்மாவதி, ரகுநாதன், வேதவாணி, ரஞ்சினிதேவி, இராஜ்குமார், நந்தகுமார், சுசீலா, சுமதி, சேகர், ஸ்ரீதர், சுகுணா, பாஸ்கர், கௌரி, பிரபாகர், சுதா, சுகுமார், சுசிகலா, சுகிர்தா, சுரேந்திரன், சுபாஸ்கரன், சுபாசினி, சுபத்திரா, ஜசிந்தா, சுதேஸ்குமார், யாழினி, அமரர் சதீஸ்குமார் மற்றும் பிரதீபன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16.03.2012 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

125, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: கணவர் V.K. சண்முகலிங்கம் (கிறிக்கற் பயிற்றுனர்)
பிள்ளைகள் S.அகிலன், S. விமலன் (அவுஸ்திரேலியா)

(7706)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.